OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 15 ஞாயிற்றுக்கிழமை (29 5 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 182

# மேல் மாகாண சபையின் நிர்வாகத்தை சந்திரிகாவிடம் இருந்து பறிக்கச் சூழ்ச்சி!

## இந்தியாவில் வெப்பக் காற்று: 55 பேர் பலி

மணிலா, மே. 29

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் வீசிவரும் கோடைக்கால வெப்பக் காற்றினால் இதுவரை 55 பேர் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்படுகிறது. (இ-5)

### ஐ. தே. கவில் மீண்டும் சேர்ந்தால்

## திட்டமிடல் அமைச்சர் பதவி றொனிக்கு?

கொழும்பு, மே 29

ஐக்கிய தேசியக்கட்சியில் றொனிடிமெல் மீண்டும் சேரும் பட்சத்தில் அவருக்கு திட்டமிடல் அமைச்சர் பதவியை வழங்க ஜனாதிபதி விஜேதுங்கா முடிவு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நிதி அமைச்சர் பதவியை றொனிடிமெலுக்கு வழங்குவதில்லை என்று ஜனாதிபதி தீர்மானித்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜெயவர்த்தனா தலைமையிலான அரசில் றொனிடிமெல் பதினொரு ஆண்டுகளாக நிதி அமைச்சர் பதவியை வகித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ. ஐ. தே. மு. உறுப்பினர்கள் 10 பேரை நீக்க ஏற்பாடு

கொழும்பு, மே 29

மேல் மாகாண சபை நிர்வாகத்தை சந்திரிகா குமாரணதுங்காவிடம் இருந்து பறிப்பதற்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடமும், காமினி திஸநாயக்காவும் சேர்ந்து சூழ்ச்சி செய்வதாக அறிவிக்கப்படுகிறது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த பதினேழு மாகாண சபை உறுப்பினர்களில் பத்துப் பேரை நீக்குவதன் மூலம் தமது திட்டத்தை நிறைவேற்றுவதற்கான திரை மறைவு நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மக்கள் கருத்துக்கு இடமளிக்காது, அதனை மாற்றி — அரசியலைத் தமது தேவைக்கு ஏற்றால் போல மாற்றும் — ஐக்கிய தேசியக் கட்சியின் வழமையான போக்கின் மற்றொரு செயற்பாடே இது என்று அவதானிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மேல் மாகாணசபையில் அங்கம் வகிக்கும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி அங்கத்தவர்கள் பத்துப் பேரைக் கட்சியிலிருந்து நீக்குவதற்கு அக்கட்சியின் தலைமைப்பீடத்தின் மீது செல்வாக்குசெலுத்த ஐ. தே. கட்சி முழுமூச்சாகச் செயற்படுகிறது.

இவ்வாறு பத்துப் பேரை நீக்குவதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்கக் கூடிய பத்துப் பேரை நியமித்து —

பொது மக்கள் ஐக்கிய முன்னணி — ஐ.ஐ.தே. முன்னணி நிர்வாகத்தைக் கவிழ்ப்பதே — இந்தச் சூழ்ச்சியின் நோக்கம் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இப்போது பொ.ம. ஐக்கிய முன்னணிக்கு ஆதரவாகவுள்ள ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்களை நீக்குவதன் மூலம், ஐக்கிய தேசியக் கட்சி நிர்வாகத்தைக் கொண்டு வருவதும் இந்த உத்தியின் மற்றொரு நோக்கமாகும்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் இருந்து பத்துப் பேரை நீக்கும் பட்சத்தில் — அக்கட்சியின் பட்டியலில் உள்ள அடுத்த வேட்பாளர்களை தேர்தல் ஆணையாளர் நியமிப்பார்.

அவ்வாறு நியமிக்கப்பட இருப்போரை ஐக்கிய தேசியக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி மற்றும் ஆனையிறவு முகாம்களிலிருந்து ஷெல்

யாழ்ப்பாணம், மே 29

ஆனையிறவு, பலாலி இராணுவ முகாம்களில் இருந்து நேற்றுக் காலை சுற்றுப்புறக் குடியிருப்புகளை நோக்கி பரவலாகச் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன.

ஆனையிறவில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் இயக்கச்சி, பளை பகுதிகளிலும் —

பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் மல்லாகம், சுன்னாகம், தெல்லிப்பளை, கட்டுவன் பகுதிகளிலும் விழுந்து வெடித்தன.

இயக்கச்சி, பளைப்பகுதியில் விழுந்த ஷெல்களினால் மூவர் காயம் அடைந்தனர். பயன்தரும் மரங்கள் முறிந்தன.

மல்லாகத்தில் விழுந்த ஷெல்லினால் இருபெண்கள் காயம் அடைந்தனர்.

வடமராட்சியில் கடற்படையினர் தொடர்ந்து பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். [இ-155-15]

### முச்சந்தி முரளி



எம் பிமாரை எப்படியாவது வழிக்குக் கொண்டுவர வேணும் என்று அதிஉத்தமர் முடிவு செய்து விட்டார் போல.....

## ஆனையிறவில் 2 படையினர் பலி

ஆனையிறவு இராணுவ முகாமுக்கு வெளியே ரோந்துப் பணிக்கு சென்று திரும்பிய இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் படையினரில் இருவர் உயிரிழந்தனர்.

இப்படி வெரித்தாஸ் வானொலி நேற்றுத் தெரிவித்தது. (இ-5)

## அவ்ரோ நோட்டம்

யாழ்ப்பாணம், மே 28

கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி, உரும்பராய், ஊரெழு ஆகிய பகுதிகளை உள்ளடக்கி நேற்று மாலை 6 மணியளவில் அவ்ரோ விமானம் ஒன்று சுற்றி நோட்டமிட்டது. (இ-5)

## கட்சியின் முடிவை மாற்ற கீழ்மட்டத்திலிருந்து அழுத்தம்

கொழும்பு, மே 29

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுதியான வெற்றியை ஈட்ட வேண்டுமானால் ஜனாதிபதி வேட்பாளர் குறித்த கட்சியின் முடிவை மாற்றிக்கொள்வது அவசியம் என்ற கருத்து கட்சிக்குள் எழுந்துள்ளதாகவும் —

இது தொடர்பாகக் கட்சித் தலைமைத்துவத்திற்கு கீழ்மட்டத்தில் இருந்து அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதாகவும் ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் கூறியுள்ளார்.

நிச்சயமாக வெற்றி பெறக்கூடிய சக்திவாய்ந்த ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் உள்ள போது சக்தி குறைந்த ஒருவரை வேட்பாளராக நிறுத்துவது சரியல்ல என்பது கீழ்மட்ட மக்களின் பொதுக் கருத்தாக உள்ளது என்றும் —

இந்நிலையால் ஜனாதிபதி வேட்பாளர் குறித்த தனது முடிவை மாற்றிக்கொள்ளாமல் அடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வது சுதந்திரக் கட்சிக்கு கடினமாக உள்ளதாகவும் அவர் கருத்து வெளியிட்டார். (இ-5-6)

## தற்போதைய எம். பிக்கள் சகலருக்கும் மீண்டும் நியமனம் கிடையாது

### உயர் நிலைக்குழு விசாரித்து முடிவு செய்யும்

கொழும்பு, மே 29

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும்போது தற்போது எம்பியாக உள்ளவர்கள் அனைவருக்கும் மீண்டும் நியமனம் வழங்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்படுகின்றது.

தற்போது எம்பியாக இருப்பவர்கள் தங்கள் பதவிக் காலத்தில் செய்த சேவைகள் கட்சியின் ஒழுக்க கோவையை அனுசரித்து நடந்துள்ளவிதம் ஆகியவற்றை மதிப்பீடு செய்த பின்னரே, அவர்களுக்கு மீண்டும் நியமனம் வழங்கப்படும்.

நியமனம் வழங்குவது குறித்து முடிவு செய்ய ஜனாதிபதி உயர் நிலைக்குழு ஒன்றை நியமித்துள்ளார்.

இக்குழுவில் கட்சியின் உயர் நிலை உறுப்பினர்கள் இடம் பெறுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் தற்போதைய தலைமைத்துவத்தை கடுமையாக விமர்சித்து வருபவர்களுக்கு மீண்டும் வேட்பாளர் நியமனம் கிடைக்கமாட்டாது என்று கட்சிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை — ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா தேர்தல் தொகுதி வாரியாக விஜயம் செய்து, அங்குள்ள அரச எம். பிக்களின் சேவை பற்றி மக்களின் கருத்துக்களை சேகரித்து வருவதில் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, தென் மாகாண சுற்றுப் பயணத்தை அவர் முடித்துக் கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. மத்திய மாகாண பயணத்தை அவர் விரைவில் மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிவிக்கப்கிறது.

## 5 மணி வரையுமே இனி பொருள் இறக்கும் வேலை

யாழ்ப்பாணம், மே 29

பருத்தித்துறையில் கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் மாலை 5 மணிவரையே இனி நடைபெறும்.

பருத்தித்துறைக்கு வரும் கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் இதுவரை மாலை 6 மணி வரை நடைபெற்று வந்தன. (இ-3)

## சந்திரிகாவின் பாதுகாப்பு கருதியே சிறிமாவோ நிறுத்தப்பட்டாராம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி வேட்பாளராக திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை நிறுத்த கட்சி முடிவு செய்துள்ளது திருமதி. சந்திரிகா குமாரணதுங்காவின் பாதுகாப்பை கருதியே என்றும் —

இறுதியில் முன்னர் எடுத்த முடிவு மாற்றப்பட்டு சந்திரிகாவே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படக் கூடும் என்றும் கருத்து நிலவுவதாக அரசியல் விமர்சகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சக்திமிக்க ஒரு தலைவராக உருவெடுத்துள்ள சந்திரிகாவின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கப்படலாம் என அஞ்சியே இந்நடவடிக்கையை கட்சி எடுத்திருக்கக் கூடும் என்றும் கருதித் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-6-5]

## தெற்கில் பெரும் வெள்ளம் ஆறுகள் உடைப்பு, மண்சரிவு

கொழும்பு, மே 29

பருவப் பெயர்ச்சி மழையினால் தென்பகுதியில் பல ஆறுகள் பெருக்கெடுத்ததை அடுத்து பல பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து பெய்து வரும் பெருமழையால் ஆறுகள் உடைப்பெடுத்து வெள்ளம் பாய்வதால் வீதிப் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது.

களுத்துறை, அங்குருவதோட்ட, உடுவர, மதுருவெல, மத்துகம, ஆகிய இடங்களில் வீதிகள் வெள்ளத்தினால் மூடப்பட்டுள்ளன.

ஜின்கங்கை பெருக்கெடுத்ததினால் காலி மாவட்டத்தின் தாழ்ந்த பிரதேசங்கள் நீரில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்கு வரமுடியா விட்டால் இலங்கை விஜயத்தை பின் போடுக

### பாப்பரசருக்கு ஆயர்கள் மகஜர்

யாழ்ப்பாணம், மே 29

கத்தோலிக்க திருத்தந்தை இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் வடபகுதிக்கு வரமுடியாவிட்டால் இலங்கைக்கான தனது விஜயத்தை பின்போட வேண்டும்.

வடபகுதியைச் சேர்ந்த கத்தோலிக்க குருமார்கள், பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் சார்பில் வத்திக்கானுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜர் ஒன்றில் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரியில் பரிசுத்த பாப்பரசர் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். அப்போது அவர் வடபகுதிக்கும் விஜயம் செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடபகுதிக்கு பாப்பரசர் வருகை தரவில்லையானால் அவரது இலங்கை விஜயமானது வடபகுதி கத்தோலிக்க மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்காது என்றும் —

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியுடன் பரிசுத்த பாப்பரசர் வடபகுதிக்கு வரமுடியும் எனவும் —

அவ்வாறில்லையெனில் வடபகுதிக்கு வருகை தரக் கூடிய சூழ்நிலை ஏற்படும்வரை இலங்கைக்கான தனது விஜயத்தை அவர் ஒத்திவைக்க வேண்டும் என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-5]

## மாணவர் மதிய உணவு திட்டம் மேலும் விஸ்தரிப்பு

### ஜூன் மாதம் முதல் அமுல்

கொழும்பு, மே 29

ஜனாதிபதி விஜேதுங்காவின் பணிப்புரையை அடுத்து மாணவர் மதிய உணவுத்திட்டம் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதுவரை உணவு முத்திரை பெறாத 17 லட்சத்து 62 ஆயிரத்து 140 மாணவர்கள் இதனால் நன்மையடைவர் என அரசு அறிவித்துள்ளது.

மதியபோசன முத்திரைகளைப் பெற்றுவந்த 5 வயதுக்கும் - 18 வயதுக்கும் இடையிலான 18 லட்சத்துக்கும் அதிகமான மாணவர்களுக்குப்புறம்பாக புதிதாக இவர்கள் நன்மையடைவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் முதல் திகதியில் இருந்து புதிதாகக் கணக்கிடப்பட்டு இவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## நீர்கொழும்பில் தமிழர்கள் கைது

கொழும்பு, மே 29

நீர்கொழும்புப் பகுதியில் கடந்த சில தினங்களாக தமிழர்கள் பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

வெளி மாவட்டங்களில் இருந்து வந்து தங்குவோரே கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்படுவதாக கம்பஹா மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பி. ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

வெளி மாவட்டங்களில் இருந்து வந்து நீர்கொழும்பில் தங்குவோர் தமது பெயரை தமது பகுதியில் உள்ள பொலீஸ் நிலையத்தில் பதிய முடியாத நிலை இருப்பது தெரிந்ததே.

பதிவு செய்வதற்கு பொலீஸார் மறுக்கின்றனர்.

பெயரை பதியாமல் தங்குவோரே தற்போது கைதுசெய்யப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ-6)

## யேமனிலுள்ள இலங்கையரை அழைக்கும் முயற்சி தோல்வி

கொழும்பு, மே 29

யேமனில் உள்ள இலங்கையர்கள் குறித்து சரியான விவரங்கள் இல்லாததால் அவர்களை இலங்கைக்கு அழைத்து வரும் வேலைகள் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யேமனில் நடக்கும் யுத்தம் காரணமாக அங்கு சிக்கியுள்ள இலங்கையரை திருப்பி அழைத்துவர வெளிநாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கைகளை எடுத்த போதும், அங்கு உள்ள இலங்கையர் பற்றிய சரியான விவரங்கள் இல்லாததால், அவ்வேலைகள் தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை — யேமனில் 800 இலங்கையர் இருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-3-9)

## இனப்பிரச்சினை தீர்வு முயற்சியில் பிரிட்டிஷ் நகர மேயர் சின்னமணி

கொழும்பு, மே 29

இலங்கையின் சமாதானத்தை கொண்டுவருவது தொடர்பாக இலங்கைப் பிரதமருடன் பேச்சு நடத்த பிரிட்டிஷ் ஹவின்ஹாம் நகர மேயர் சின்னமணி முயற்சி மேற்கொண்டுள்ளார்.

இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான ஆற்றல் உள்ளவர்கள் ஓரளவு நம்பிக்கையைத் தந்திருப்பதாக கூறும் அவர் இது தொடர்பாக இலங்கை பிரதமருடன் பேச்சு நடத்த லண்டனில் உள்ள இலங்கை தூதரகத்தின் உதவியை நாடியுள்ளார்.

பிரதமருடனான சந்திப்பு இடம்பெற்றால் அதன் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்து பல்வேறு தரப்பினருடனான பயணத்தை மேற்கொள்ள தாம் எண்ணியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்தகட்டமாக யாழ்ப்பாணத்துக்கு தாம் செல்லும் போது யாழ். ஆஸ்பத்திரிக்கு ஜெனரேட்டர் இயந்திரம் ஒன்றை அன்பளிப்புச்செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மைலாப்பூர் பெருந்துறை தேர்தல் முடிவுகள் இன்று

### அ. தி. மு. க. முன்னணியில்

தமிழ்நாடு உட்பட 10 மாநிலங்களில் நடைபெற்ற இடைத்தேர்தல்களின் வாக்கு எண்ணும் வேலைகள் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் நேற்று ஆரம்பமாகின.

தமிழகத்தின் மைலாப்பூரில் 56.36 வீதவாக்குகளும் பெருந்துறைத் தொகுதியில் 72.2 வீத வாக்குகளும் பதிவாகியதாக அறிவிக்கப்படுகிறது.

தேர்தல் முடிவுகள் இன்று மாலைக்குப் பின் வெளியாகும் என எதிர் பார்க்கப்படுகிறது.

பெருந்துறை தொகுதியில் அண்ணா தி மு கழக வேட்பாளர் முன்னணியில் இருப்பதாக நேற்று நள்ளிரவு தெரிவிக்கப்பட்டது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிவந்து விட்டது!!

### வெப்ப இரசாயன நுட்பங்கள்
(க. பொ. த. உயர்தர வகுப்பிற்குரியது)

**T NAGARATNAM** B Sc. (Ceylon)

பல வருடங்களாக இரசாயனத்தில் விசேட சித்தி பெற்று பல்கலைக்கழகம் புகுந்த மாணவர்களின் நன் மதிப்பைப் பெற்ற ஆசிரியரின் உன்னத வெளியீடு. பல அரிய நுட்பங்களை உள்ளடக்கியது.

சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

**'A' LEVEL CENTRE**

1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

[சி-8225]



## யாழ். சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயம் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும்

இடம்: பாடசாலை மண்டபம்
காலம்: 22 - 06 - 1994 புதன்கிழமை
நேரம்: காலை 9 மணி

பொதுக் கூட்டத்திற்குப் பிரேரணைகளை அனுப்ப விரும்புவோர் 14 - 06 - 94க்கு முன்னர் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும். 94/95ற்கான அங்கத்துவத்தைப் புதிப்பிப்போரும், புதிய அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோரும் சந்தாப்பணம் 25/-ஐ 14 - 06 - 94க்கு முன்பாக பொருளாளரிடம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

சோ. பத்மநாதன்
தலைவர்.

இ. சின்னத்தம்பி
செயலாளர்.

(31138)



## தாய்மார்களுக்கு நற்செய்தி பளிச்சிடும் வெண்மையை தந்திடும் ஒரே நீலம்

# றோயல் நீலம்

★ பள்ளிக் குழந்தைகளின் ஆடைகளுக்கு பளிச்சிடும் வெண்மையை தருவது
றோயல் நீலம்
★ வீட்டுத் தலைவன் விரும்பி வாங்கி வருவது
றோயல் நீலம்
★ ஆடைகளுக்கு எந்தவித ஊறும் விளைவிக்காமல், பட்டென பளிச்சிடுவது
றோயல் நீலம் ஒன்றுதான்

தமிழீழத்தில் உத்தரவாதம் பெற்றது றோயல் நீலம் என்பது பெருமைக்குரியது.

**சில்லறை விலை ரூ. 6-50 மட்டுமே**

சந்தைப்படுத்துவோர்.

**றோயல் இன்டஸ்ரீஸ்,**
பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

(சி-8194)


## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 11 – 03 – 1962
உதிர்வு: 29 – 05 – 1984

### M. R. மணிவண்ணன்

கண்ணின் மணிவண்ணா!
அலைநிலவே கற்பனையில்
என்னும் போதெல்லாம்
இனிக்கின்ற தேனமுதே
மண்ணில் எமதுளத்தை
மகிழ்வித்த பொன்மலரே!
விண்ணில் பத்தாண்டு
வீற்றிருந்தே வேண்டுகிறாய்.

உன்பிரிவால் துயருறும்,
அம்மா, தம்பி, உறவினர்கள்.

41, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

(31096)

## ஜூன் 5 உலகசுற்றாடல்தினம் மரங்களை நடுவோம் வாரீர்!

### பொருண்மிய நிறுவனம் அழைப்பு

யாழ்ப்பாணம், மே 29

எதிர்வரும் ஜூன் 5 ஆம் திகதி உலக சுற்றாடல் தினமாகும்.

இத் தினத்தில் மரங்களை நடுவதிலும், சூழலை தூய்மையாக்குவதிலும் நடப்பட்ட மரங்களைப் பராமரிப்பதிலும் அக்கறை கொள்ள திடசங்கற்பம் செய்வோம் என்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

காடுகளை அழிப்பதையும், மரங்களைக் கண்டபடி தறிப்பதையும் தவிர்க்க வேண்டும் என்றும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது சூழலைப் பாதுகாக்க ஒரேவழி, நிலத்தை மூடி மரங்களை வளர்ப்பதே என்றும் - இதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-எ)


## G.C.C. வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்

514/14, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

(கண்), மூக்கு, தொண்டை, காது (E.N.T.) முறிவு மகப்பேறு, சத்திரசிகிச்சை, சிறுபிள்ளைக்குரிய வைத்தியம், சருமநோய்கள், என்பவற்றிற்கு விசேட வைத்திய நிபுணர்களால் ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றது.

(யாழ். அரசாங்க வைத்தியசாலை
பழைய O. P. D. முன்பாக)

– நிர்வாகி.

(31141)


## மாதாந்த அறிவியலரங்கு

காலம்:
29 - 05 - 1994 ஞாயிறு பிற்பகல் 3 மணி
இடம்:
இராமநாதன் மகாவித்தியாலயம் உசன் மிருசுவில்
தலைப்பு:
தமிழர் பண்பாடும் பழக்க வழக்கங்களும்
நிகழ்த்துபவர்:
பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்
(தலைவர், தமிழ்த்துறை யாழ் பல்கலைக்கழகம்)

அறிவுத் தேடல் மிக்கோர்
அனைவரும் வருக!

– நூலக அபிவிருத்திச் சபை.

பிரதேச சபை பொதுநூலகம்,
உசன் மிருசுவில்.

துணைக்கரம்:

**நலன் விரும்பி**
உசன் மிருசுவில்.

(31144)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# தற்காலிக தொழிலாளர் வெற்றிடம்

யாழ்ப்பாண மாநகரசபை அமைய அடிப்படையில் சுத்திகரிப்புப் பணியுடன் கழிவுப் பொருள்களையும் நிர்மாணப் பொருள்களையும் ஏற்றியிறக்கும் பொது தொழிலாளர்களை நியமனம் செய்வதற்குத் தீர்மானித்துள்ளது.

கீழ்காணும் தகைமையுடையோர் தாமே தயாரித்த விண்ணப்பத்துடனும் தமது தகைமைகளை நிரூபிக்கும் மூலச்சான்றிதழ்களுடன் தேசிய அடையாள அட்டையுடனும் எதிர்வரும் 04-06-1994ம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு நல்லூர் பண்டாரமாளிகை வளவில் அமைந்துள்ள மாநகரசபை அலுவலகத்திற்குச் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்;

தகைமைகள்:

அ) கல்வி — ஐந்தாம் வகுப்பில் சித்தி
ஆ) வயது — 18 வயது தொடக்கம் 40 வயது வரை
இ) யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

வே.பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்,

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
24-05-1994.

(சி/8347)

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி நிரஞ்ஜலா இராசநாயகம்
(மாணவி – பாரதி கான சபா இசை வகுப்பு)

20-05-94 இல் எமைப்பிரிந்த செல்வி நிரஞ்ஜனாவிற்கு எமது இதய பூர்வமான அஞ்சலியை செலுத்துவதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

இசை ஆசிரியரும்,
மாணவர்களும்.

பாரதி கான சபா,
யாழ்ப்பாணம்.

(31150)

## புலிகளின் குரல் வானொலியில்

29 – 05 – 1994
ஞாயிறு இரவு
★ 8·01 — இசையரங்கம் — நிகழ்ச்சியில் பாடுபவர் காலபுரத்தான்
★ 8·30 — செய்திகள்
★ 8·40 — தொடர் நாடகம் இலங்கை மண் — 25 ஆம் அங்கம்

30 – 05 – 1994
திங்கள் காலை
★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப் பாடல்கள்.

## சொத்தி உபாலி புகைபிடிக்க தடை

கொழும்பு, மே 29

காவலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலக தலைவர் சொத்தி உபாலி புகை பிடிப்பதற்கு பொலிஸார் தடை விதித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நாட் தொடக்கம் பம்பலப்பிட்டி பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலம் வரை புகைபிடிக்க சொத்தி உபாலிக்கு பொலிஸார் அனுமதி வழங்கியிருந்தனர்.

இப்போது சொத்தி உபாலி பொலிஸ் தலைமையகத்தின் ஆறாவது மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் இங்கு கொண்டு வரப்பட்ட நாள் முதல் புகைபிடிப்பதற்கு அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.– (ஒ-எ)

## கௌரவிப்பு

யோகாசன ஆசான் திரு.ச. சொக்கலிங்கத்தைக் கௌரவிக்கும் வைபவம் ஒன்று கடந்த 21 ஆம் திகதி சுண்டுக்குளி வடக்கு சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்டது.

மிக்கவைத் அதிபர் கலாநிதி க. கனகராசா "யோகாசனக் குரு" எனும் பட்டத்தை அவருக்கு வழங்கினார். டாக்டர் இ. தெய்வேந்திரம் பத்திரம் வழங்கி பொன்னாடை போர்த்தி அவரைக் கௌரவித்தார்.

(க)

## இன்று

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் வாராந்த இலவச சோதிட வகுப்புக்களும், ஆய்வரங்கும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மணிமண்டபத்தில் நடைபெறும்.

இன்றைய ஆய்வரங்கில் திரு. எஸ். சிவநாதபிள்ளை "கிரகங்களும் பார்வையும்" என்ற பொருளிலும் ஐயா, சச்சிதானந்தம் "சுக்கிரன் காற்றுமண்டலமா?" என்ற பொருளிலும் ஆய்வுரை வழங்குவார்கள் (ஒ)

★ ★ ★

தென்மராட்சிப் பகுதியில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மாதர்கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இணைந்து நடத்தவிருக்கும் மாபெரும் பொருட்காட்சி தொடர்பான கூட்டம் ஒன்று இன்று ஞாயிறு பிற்பகல் 3மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறும் (ஒ-117)

★ ★ ★

சாவகச்சேரி பிரதேச சபை பொது நூலக உசன் கிளை நூலக அபிவிருத்திச் சபையினர் நடத்தும் மாதாந்த அறிவியலரங்கு இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு உசன் இராமநாதன் மாவித்தியாலயத்தில் நடைபெறும்;

யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் "தமிழர் பண்பாடும் பழக்க வழக்கங்களும்" என்னும் பொருளில் உரையாற்றுவார். (ஒ-117)

★ ★ ★

அகில இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்த இசை நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு மன்றக் கலாமண்டபத்தில் நடைபெறும்.

விழாவில் திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம் திரு. எஸ் குமாரசாமி ஆகியோரின்பாட்டும் புத்தூர் புதுவை அன்பனின்சதியை வென்ற சாவித்திரி இசைநாடகமும் இடம் பெறும். (க-111)

★ ★ ★

வட்டுக் கோட்டை அராலி மேற்கு பைந்தமிழ் சனசமூக நிலையத்தின் முதலாம் ஆண்டு நினைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலையத் தலைவர் திரு. சுப்பு செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது. (க161)

## சட்ட நிபுணர்கள் ஆராய்வு

கொழும்பு, மே 29

பதவி விலக மறுத்து வரும் தேசியப்பட்டியல் எம். பிக்களை பதவி விலக்குவது தொடர்பான சட்ட நுணுக்கங்களை ஐக்கிய தேசியக் கட்சியின் சட்ட நிபுணர்கள் ஆராய்ந்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

(ஒ-எ)


உ

மீசாலை தெற்கு

## அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி மணவாளக்கோல நன்னாள் திருவிழா

(21 – 05 – 1994) சனிக்கிழமை தொடக்கம் நடைபெறும் அலங்காரத்திருவிழாவின் பத்தாம் நாளாகிய நாளை (30 – 05 – 1994) திங்கட்கிழமை மணவாளக்கோல நன்னாளை முன்விட்டு பகல் வேதாகம சோதிட பூஷணம் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் தலைமையில் ஸஹஸ்ர (1008) சங்காபிஷேகம் நடைபெறும்.

மாலை சண்முகப்பெருமானுக்கு விசேட சண்முகா அர்ச்சனையும் இலக்கிய செம்மல் த. நாகேஸ்வரன் அவர்களால் நடத்தப்பட்ட "மகாபாரதம்" தொடர் சொற்பொழிவு பூர்த்தியும் நடைபெறும்.

காலை மாலை நிகழ்ச்சிகளில் நாதஸ்வர மேதை எம். பஞ்சாபிகேசன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி நடைபெறும்.

(31153)

– பரிபாலன சபையினர்


## புலோலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்
புலோலி கிழக்கு பருத்தித்துறை

# பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தினையும் மேலதிக விவரங்களையும் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. பொதுமுகாமையாளர் பதவி 165/88 - 101/9

தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளர் 10ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 3 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 6 வருட அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) / கா. பொ. த. (உயர்தரம்)இல் 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

சம்பளத்திட்டம்:

$\frac{1405 - 2470}{60X4 - 75X11}$ இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் வழங்கப்படும்.

2. அக நிலைக்கணக்காய்வாளர் 165/88 – 105/ 12

தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 13ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்கு அல்லது கணக்காய்வு லிகிதர் பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவமும், கூட்டுறவுப்பணியாளரின் 14ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்கியல் சம்பந்தமான துறையிலான பதவியில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவமும்.

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில்/ ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் சம்பந்தமான துறையிலான பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) க. பொ. த. (உயர்தரம்) இல் கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்ட மூன்று பாடங்களிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்டவர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் துறையிலான பதவியில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவமும்.

சம்பளத்திட்டம்:

$\frac{1155 - 1685}{30X7 - 40X8}$ இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் வழங்கப்படும்.

பொது

வயதெல்லை:

25 — 50 வரை. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

பிணைகள்:

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு பிரமாணத்திற்கமைய செலுத்தப்படல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 10-6 94ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ எமக்குக் கிடைக்கக்கூடியவாறு தலைவர், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

– தலைவர்.

25 - 05 - 1994

(சி-8348)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

உரும்பிராய் சந்தியில் பிரதான பாதை அருகே அமைந்திருக்கும் 4 பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. கமலசேகரம் (நில அளவையாளர்), உரும்பிராய் சந்தி, உரும்பிராய். (7314)

சுண்டிக்குளி தெற்கு, கந்தர்மடம், திருநெல்வேலி வீடு தளபாடங்களுடன் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (31116)

45 நாட்கள் நிரம்பிய அல்சேஷன் ஆண், பெண் நாய்க்குட்டிகளும், பொமனேரியன் குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. நடராசா, புலேந்திரன் வீதி (ஆனைப்பிலவளயில் ஒழுங்கை), பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு. (31131)

வட்டு; வடக்கு சித்தன்கேணியில் வீடும், 5 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி ம. வேலாயுதம்பிள்ளை "டச் றோட்" வட்டு வடக்கு சித்தன்கேணி. (7816)

ஸ்ரீ விராட் விஸ்வப் பிரம்மாவின் அழகிய பஞ்சவர்ண கலர் படங்கள் விற்பனைக்கு உண்டு. தனிப்பிரதி ரூபா 25/- தொகையாக கொள்வனவு செய்யும் சங்கங்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் கழிவு உண்டு. தொடர்பு: க. வி. இராசரெத்தினம், ஆனந் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ், 177, அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம். [7421]

### காணி விற்பனைக்கு

நுணாவில் சந்தியில் இருந்து 200 யாரும், கண்டி றோட்டில் இருந்து 50 யார் தூரத்தில் அமைந்ததும், 350—400 முதிர்ந்த பனைமரங்களைக் கொண்ட "வீரக்கோடியன் வளவு" 12 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு. தம்பையா பிள்ளை (609) 151, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (31148)

### மணமகன் தேவை

இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த வயது 42 மகம் 1ஆம் பாதம் சுக்கிர செவ்வாய் குற்றமற்ற... கொழும்பு, தட்டெழுத்து A/L படித்த பெண்ணுக்கு அரசாங்க உத்தியோகம் அல்லது சொந்த வியாபாரம் செய்யும் மணமகன் தேவை. தாரமிழந்தவரும் விண்ணப்பிக்கலாம். இல 651, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (31134)

### மணப்பெண்கள் தேவை

குற்றமற்ற 35 வயது T. A.க்கும், 33 வயது டாக்டருக்கும், 34 வயது என்ஜினியருக்கும் தேவை. எம்மிடம் மணமக்கள் பலர் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [31152]

### தவறிவிட்டது

27-5-94 இல் கோண்டாவில் பழனி ஆண்டவர் கோயிலுக்கும் ஒற்பதி வீதிக்கும் இடையில் புங்குடுதீவு 7, நடராசசர்மா அம்பரசிக்குச் சொந்தமான நேர்முகப் பரீட்சை ஆவணங்களுடன் கறுப்பு P/P Bag தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் M. K. S. மெடிக்கல், 8ஆம் கட்டை, கே. கே. எஸ். வீதி, கொக்குவில் விலாசத்தில் தயவுசெய்து ஒப்படைக்கவும். (31150)

### பயிற்சி வினாத்தாள்கள்

A/L, O/L ஆண்டு 5 புலமைப்பரிசில் 3, 4, 5, 6, 7, 8, 9, 10 வகுப்புகளுக்கான ஒவ்வொரு மாதமும் எம்மால் வெளியிடப்படுகின்ற பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், புத்தகசாலைகள், ஆசிரியர்களுக்கு விசேட கழிவுண்டு. Bond, யாழ்ப்பாணம். (7365)

### மணிக்கூடு திருத்துதல்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். உதிரிப்பாகங்களுக்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். குடும்ப அட்டையுடன் வரவும். ஜஜன்ஸ் வாச் வேக்ஸ், 12, புகையிரத நிலைய வீதி, சுன்னாகம். சந்திக்கருகில். (7413)

### பரீட்சை வழிகாட்டி

க. பொ. த. சாதாரணதர மாணவர்களுக்காக சரித்திரப் பரீட்சை வழிகாட்டி வினா-விடை நூல் வெளிவந்து விட்டது. தொகுப்பு: இராஜகிருஷ்ணர். இரகுநாதன் வெளியீடு. ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (7417)

### SPOKEN ENGLISH

Spoken English with Grammar கற்பிக்கப்படுகிறது. நேரங்கள் வேண்டியவாறு தரப்படும். V. N. Kandasamy A. I. B. part I (London), Inter (London) Dip-in-English 87, திருநெல்வேலி றோட் (ரயில் கடவைக்குச் சமீபமாக), கொக்குவில். [7423]

### O/L MATHS

O/Lஇல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, கண்டிக்குளி. (7716)

### A/L பௌதீகவியல் 95/96

தனிப்பட்ட முறையில் பௌதீகவியல், தூய கணிதம், பிரயோக கணிதம் பயிற்சிகளோடு அனுபவம் உள்ள ஆசிரியரினால் சிறப்பாகக் கற்பிக்கப்படும். பாலசுப்பிரமணியம், B. Sc. (Cey) Dip-in Ed. 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (31127)

### O/L MATHS - 94

Distinction, Credit பெறுபேறடைய, 15 வருடங்கள் கிடைத்தாள்கள் திருத்திய அனுபவமுள்ள B. Sc. ஆசிரியரால் (ஆண்டு 9, 10) கற்பிக்கப்படும். இல: 85, சிவன் கோயிலடி, திருநெல்வேலி. (31135)

### மிருதங்கம்

தோல் வாத்தியங்கள் யாவும் ஒரு கிழமைக்குள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் 192/1, நாவலர் றோட், பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். (31087)

### 94-ம் ஆண்டு இராசி பலன்

இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட 12 ராசிகளுக்கும் ஒரே புத்தகமாக விற்பனையாகின்றது. சொற்ப பிரதிகள் மட்டும் கைவசம் உண்டு. உங்கள் பிரதிக்கு முந்துங்கள். சனகா றேடர்ஸ் திருநெல்வேலிச் சந்தி, (சி-8330)


# A/L 94
## கணக்கியல்

மாணவர்களின் நலன் கருதி பரீட்சையில் 45 புள்ளிகள் பெறத்தக்க வகையிலான வெளியீடுகள்:-

1) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (S L A. S) (10 புள்ளிகள்)

❋ விற்பனையில் ❋

2) கம்பனி முடிவுக் கணக்குகள் (17½ புள்ளிகள்)

❋ வெகு விரைவில் விற்பனையில் ❋

3) பங்குடமை முடிவுக் கணக்குகள் (17½ புள்ளிகள்)

❋ வெகு விரைவில் விற்பனையில் ❋

ஆக்கியோன்:

**D. SAM**

(81036)



## போஷாக்கு நிறைந்த சத்துணவு

# ஜீவாகாரம்
# JEVAKARAM

இது முன் கூட்டியே தயாரிக்கப்பட்ட உப உணவாகும்.

★ வளர்ந்து வரும் குழந்தைகளுக்கும்
★ போஷாக்கு குறைவான குழந்தைகளுக்கும்
★ பாலூட்டும் தாய்மார்களுக்கும்
★ கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் உகந்தது.

கிடைக்குமிடம்:

# அண்ணா தொழிலகம்

இணுவில் / யாழ்ப்பாணம்,
திருநெல்வேலி.

(இ-8238)



❋ உங்கள் மின் பிறப்பாக்கி பழுதடைந்து உள்ளதா?

❋ புதிதாக ஒரு மின்பிறப்பாக்கியை அமைத்துக்கொள்ள விரும்புகிறீர்களா?

❋ மின் விநியோக வேலைகள் செய்ய வேண்டியுள்ளதா?

## கவலை வேண்டாம்

❋ நீண்டகால உத்தரவாதத்துடன் நல்ல முறையில் மின் பிறப்பாக்கிகளைத் திருத்திக் கொள்ளவும்,

★ புதிய மின் பிறப்பாக்கிகளை அமைத்துக் கொள்ளவும்,

❋ மின்விநியோக வேலைகளை திருப்திகரமாகவும், திறமையாகவும் செய்து கொள்ளவும்,

நாடுங்கள்:

## சக்திப் பகுதி
## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

காங்கேசன்துறை வீதி,
தாவடிச்சந்தி,
தாவடி,
தமிழீழம்.

'உங்கள் தேவைக்கு... எங்கள் சேவை'

(சி 8338)


## பிற்போடப்பட்டது

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவ மன்றத்தால் 30-05-94இல் நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 30-6-1994இற்கு ஒத்திப் போடப்பட்டுள்ளது.

- மாணவ மன்றத்தினர்.

(31154)

## விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

நடத்தும்

## கரும்புலிகள் நாளையொட்டிய
# அரங்க விழாவும், கிராமிய ஆட்ட கலை விழாவும்

05-07-1994 அன்று நடைபெறவிருக்கும் கரும்புலிகள் நாளையொட்டி விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் மாவட்டங்கள் மட்டத்தில் நடத்தவிருக்கும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் அமைப்புக்கள், தனிநபர்களுக்கான விதிமுறைகளை கீழே வகைப்படுத்தித் தருகின்றோம்.

சகல போட்டிகளுக்குமான விண்ணப்பங்களும், கோட்ட மட்டத்திலான விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக செயலகங்களில் 02-06-1994க்கு முன்னதாக நேரில் கையளிக்கப்பட வேண்டும்.

### அரங்க வகைகளும் போட்டி விதிமுறைகளும்

1. பாரம்பரிய அரங்க முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் நாடகங்கள். உதாரணமாக கூத்து, இசைநாடகம், வரலாற்று நாடகம், இலக்கிய நாடக வடிவங்களைக் கொண்டவையாக இவை அமையும்.
2. நவீன அரங்க முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் நாடகங்கள். உதாரணமாக இயல்புநெறிவாதம், யதார்த்தவாதம், மோடிமை, குறியீட்டுத்தன்மை கொண்டவையாக இவை அமையும்.

### பொது அறிவுறுத்தல்கள்

1. கலை வடிவங்களின் கருப்பொருள் சமகாலப் பிரச்சினைகள், நிகழ்வுகளை யொட்டியதாகவும், கலையம்சம் நிறைந்ததாகவும் எமது விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்வதாகவும் அமைதல் வரவேற்கத்தக்கது.
2. நாடகம் 45 நிமிடங்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும். (ஐந்து நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்.)
3. (அ) சிறந்த நடிகர்
   (ஆ) சிறந்த நடிகை
   (இ) சிறந்த நெறியாள்கை
   (ஈ) சிறந்த எழுத்துரு
   (உ) சிறந்த இசையமைப்பு
   (ஊ) சிறந்த வேடப்புனைவு

   என்பவற்றிற்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.

### சிறுவர் அரங்கு

சிறுவர்களின் வயதிற்கும் உளவளர்ச்சிக்கும் அமைவாகக் கருப்பொருள் அமைய வேண்டும். அத்துடன் நாடக அளிக்கையில் சிறுவர்களே பங்குகொள்ள வேண்டும். பின்னணி வாத்தியக் கருவிகளை மட்டும் பெரியோர் கையாளலாம்.

### பொது அறிவுறுத்தல்கள்

(அ) நாடக அளிக்கையில் ஆறு தொடக்கம் பன்னிரண்டு (6—12) வயது வரையுள்ள சிறுவர்கள் கீழ்ப்பிரிவிலும், 13 தொடக்கம் 17 வயது வரை உள்ளவர்கள் மேற்பிரிவிலும் அடங்குவர்.

(ஆ) கீழ்ப்பிரிவு நாடகம் 20 நிமிடங்கள் கொண்டதாக அமைதல் வேண்டும். (2 நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்)

(இ) மேற்பிரிவின் நாடகம் 30 நிமிடங்கள் கொண்டதாக அமைதல் வேண்டும். (5 நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்)

(ஈ) சிறுவர் நாடகங்களை பாடசாலைகளோ, தனிநபர்களோ, அமைப்புக்களோ தயாரிக்கலாம்.

(உ) நாடகங்களில் பங்கேற்கும் சிறுவர்களின் வயதெல்லையை பாடசாலைகளாயின் பாடசாலை அதிபர்களும், தனிநபர் தயாரிப்பு அல்லது அமைப்புக்களின் தயாரிப்புக்களாயின் அப்பகுதி கிராம சேவகரும் உறுதிப்படுத்த வேண்டும்.

(ஊ) நாடக அளிக்கையில் பங்குகொள்ளும் சிறுவர்களின் எண்ணிக்கை 15க்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

### கிராமிய ஆட்டக் கலைப் போட்டிகள்

1. கோலாட்டம்
2. கரகம்
3. ஆட்டக்காவடி
4. கும்மி

### பொது அறிவுறுத்தல்கள்

(அ) இவை ஒவ்வொன்றும் 10 நிமிடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

❋ குறிப்பு

(அ) ஒவ்வொரு போட்டியிலும் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று தெரிவுகளுக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

(ஆ) நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

(இ) தயாரிப்புக்களுக்கான செலவுகளையும், போக்குவரத்துக்கான செலவுகளையும் தயாரிப்பவர்களே பொறுப்பேற்க வேண்டும். மாவட்ட மட்டத்திலான போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்படும் தயாரிப்புகளுக்கான போக்குவரத்து வசதிகளை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் பொறுப்பேற்கும்.

(ஈ) மேடையேற்றப்படாத புதிய நாடகங்களும், கிராமிய ஆட்டக் கலைகளும் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

(உ) மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் அந்தந்த கோட்டக் கலை, பண்பாட்டுக் கழகச் செயலகங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்,
நடுவப் பணியகம்,
தமிழீழம்.

## இதய அஞ்சலி

### அமரர் அம்பிகாபதி பாலசுந்தரம்

(தலைவர், உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் வடக்கு - கிழக்கு மாகாணம்.)

எமது நண்பரும், அரும் பெரும் சேவையாளரும், எமது சங்கத்தின் தலைவருமான அமரர் அ. பாலசுந்தரம் அவர்களின் மறைவு எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருடன் அமரருக்கு எமது இதய அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

செயலாளரும்,
எழுதுவினைஞர்களும்.

வலி. மேற்கு பிரதேசசபை,
சுழிபுரம்.

(31151)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் க. லம்போதரன்

(ஓய்வு பெற்ற கணக்காளர்)

தோற்றம்: 8 — 11 — 1931
மறைவு: 21 — 05 — 1992

திதி: 29-5-1994

விநாயகப் பெருமானின் அருளினாலும் வீர பத்திர சுவாமியின் அருளினாலும் அவர்கள் பாதங்களை வணங்கி வேண்டுகிறோம் ஓர் வரம்

இவ்வுலகில் எங்களுக்கு சிறந்த வழிகாட்டியாய் வாழ்ந்த பாசமிக்க குடும்பத் தலைவனை மீண்டும் ஒரு முறை - என்றைக்கோ அவ்வுலகில் சந்திக்க அருள் தருவாய்.

மனைவி,
சகோதரன், சகோதரிகள்.

126/4, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(31083)

இப்போட்டிகளில் பங்குபற்றும் போட்டியாளர்கள் கீழ்வரும் மாதிரிப் படிவத்தை பூர்த்தி செய்து விண்ணப்பிக்கவும்.

## விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

நடத்தும்

## கரும்புலிகள் நாளையொட்டிய
# அரங்க விழாவும் கிராமிய ஆட்டக் கலை விழாவும் விண்ணப்பப்படிவம்

1) பங்குபற்றும் அமைப்பின் பெயர்:
............................................................
............................................................

2) முகவரி:
............................................................
............................................................
............................................................
............................................................

3) கோட்டத்தின் பெயர்:
............................................................
............................................................

4) நாடகத்தின் தன்மை:
அ: ........................................................
ஆ: ........................................................
இ: ........................................................
ஈ: ........................................................

5) கிராமிய ஆட்டக்கலை:
அ: ........................................................
ஆ: ........................................................
இ: ........................................................
ஈ: ........................................................

இப்போட்டிகளின் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ளுகின்றேன் என்பதை அறியத்தருகின்றேன்.

............................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

(சி-8307)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சேவையில் உள்ள எழுதுநர் சேவைக்கும், அதனோடிணைந்த சேவைகளுக்கும, அரச கூட்டுத்தாபனங்களில் உள்ள எழுதுநர் சேவைக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான

# பொதுப் போட்டிப் பரீட்சை - 1994

1.0 ஒருமுகப்படுத்திய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் அரச சேவையிலும் அரச கூட்டுத்தாபனங்கள் சேவையிலும் உள்ள பின்வரும் பதவிகளுக்கு தகைமை பெற்ற ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விதித்துரைத்த தேவைகளைத் திருப்திப்படுத்தும் வேட்பாளர்கள், பரீட்சை ஆணையாளரால் நடத்தப்படவுள்ள எழுத்து மூலப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் படி திறமை அடிப்படையிலும், மாவட்டச் சனத்தொகை, இன விகிதம் ஆகியவற்றின் அடிப்படையிலும் பின்வரும் பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்குத் தெரிவு செய்யப்படுவார்கள். ஆட்சேர்ப்புத் தொடர்பான தெரிவுகள் 1990 - 03 - 09 திகதியிட்ட 15/90ஆம் இலக்க, 1990 - 03 - 25 திகதியிட்ட 15/90 (i) ஆம் இலக்க 1990 - 06 - 15 திகதியிட்ட 15/90 (ii) ஆம் இலக்க, 1991 - 08 - 14 திகதியிட்ட 36/91 ஆம் இலக்க 1992 - 02 - 19 திகதியிட்ட 8/92ஆம் இலக்க 1992-03-24 திகதியிட்ட 17/92ஆம் இலக்க 1993-06-17 திகதியிட்ட 14/93 ஆம் இலக்க 1994 - 01 - 10 திகதியிட்ட 02/94 ஆம் இலக்க 1988-08-18 திகதியிட்ட 27/88 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றிக்கைகளுக்கு அமையச் செய்யப்படும். இச்சுற்றறிக்கைகளின் தொடர்புள்ள பகுதிகள் இவ் விளம்பரத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

| சேவை | பதவிக்குக் குறித்தொதுக்கிய இலக்கம் | பதவி | பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நிரப்பப்படவுள்ள பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1:1. அரசாங்க சேவை: | | | |
| (அ) இணைந்த சேவை | 01 | பொது எழுதுநர் சேவை | 764 |
| | 02 | சிறாப்பர் சேவை | 13 |
| | 03 | கணக்குப் பதியுநர் சேவை | 17 |
| | 04 | களஞ்சியக் காப்பாளர் சேவை | — |
| (ஆ) முடிய சேவை | 05 | சுகாதார எழுதுநர் சேவை | — |
| | 06 | அச்சக எழுதுநர் சேவை | 06 |
| | 07 | புகையிரத எழுதுநர் சேவை | 20 |
| | 08 | புகையிரத நேரம் பதியுநர் எழுதுநர் சேவை | 05 |
| | 09 | இணைந்த அஞ்சல் சேவையின் பிரிவு 'ஆ' தரம் II | 45 |
| | 10 | புகையிரத நிலைய அதிபர் (வகுப்பு II) ஆண் விண்ணப்பதாரர் மட்டும் | 30 |
| | 11 | நீதித்துறை எழுதுநர் சேவை | — |
| 1:2. அரச கூட்டுத்தாபனச் சேவைகள் | 12 | அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச் சட்ட சபைகள் அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனிகள் பிற இணைந்த நிறுவனங்களில் உள்ள எழுதுநர் சேவை | 200 |
| 1:3. பதவிகளுக்கு நியமித்தல் | | சேவையாற்றுவதற்கு விரும்பிய பதவிகளுக்கான விருப்பத் தெரிவுக்கு அமையவும் வேட்பாளர்கள் பரீட்சையிற் பெற்ற திறமையின் ஒழுங்கிலும் பொருத்தமான ஆட்கள் நியமிக்கப்படுவர் | |

1:4. நியமிக்கப்படவுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கையும் நியமனங்கள் செயல்வலுப் பெறும் திகதியும் நியமிப்பு அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். பதவி வெற்றிடங்களில் ஏதாவது எண்ணிக்கையை அல்லது எல்லாவற்றையும் நிரப்பாது விடுவதற்கு நியமிப்பு அதிகாரிக்குத் தத்துவம் அளிக்கப்பட்டுள்ளது

## 2.0 வேதனம்

2:1. சேவைகள் 01—08 வரையுள்ள மேற்குறித்த பதவிகளுக்கான வேதன அளவுத்திட்டம்: ரூபா 24.120—14X660—6X780—ரூபா 38 040

2:2. இலக்கம் 9இன் கீழான (இணைந்த அஞ்சல் சேவை பிரிவு 'ஆ' தரம் II) பதவிகளுக்குரிய வேதன அளவுத்திட்டம்: ரூபா 28 740 - 7X660 - 15X780 - ரூபா 45 060

2:3. சேவை இலக்கம் 10 இல் உள்ள (புகையிரத நிலைய அதிபர்கள் - வகுப்பு II) பதவிகளுக்கான வேதன அளவுத் திட்டம்: ரூபா 28.740 - 7X660 - 8X780 - ரூபா 39.600

2:4. இலக்கம் 11 இல் உள்ள (நீதித்துறை எழுதுநர் சேவை) பதவிகளுக்குரிய வேதன அளவுத்திட்டம்: ஆட்சேர்ப்புத் தரம்: ரூபா 27.420—28.080 28 740

2:5. மேலே 2:1 முதல் 2:4 வரை குறிப்பிடப்பட்ட பதவிகள் நிரந்தரமானவையும் ஓய்வூதிய முடையவையும்.

2:6. சேவை இலக்கம் 12இல் உள்ள பதவிகள் (அரச கூட்டுத்தாபனங்களிலுள்ள எழுதுநர் சேவை): அரச கூட்டுத்தாபனங்களில் உள்ள எழுதுநர் பதவிகளுக்குரிய வேதன அளவுத்திட்டம் அந்தந்த ஆட்சேர்ப்பு அட்டவணையில் விதித்துரைக்கப்படும்.

## 3.0 தகைமைகள்:

3:1. பின்வரும் தகைமைகள் இணைந்த அஞ்சல் சேவை, புகையிரத நிலைய அதிபர் சேவை (வகுப்பு II), நீதித்துறை எழுதுநர் சேவை அரசாங்க கூட்டுத்தாபனங்களில் உள்ள எழுதுநர் சேவை ஆகியவை தவிர்ந்த அரசாங்க சேவைக்கு வேட்பாளர்களை ஆட்சேர்ப்பதற்குரிய தகைமைகளுடன் தொடர்புறுகின்றது.

3.11. கல்வித் தகைமைகள்:
சிங்களம்/தமிழ்மொழி/இலக்கியம், எண்கணிதம்/கணிதம்/வர்த்தக எண்கணிதம் அடங்கலாக 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரண)/தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் ஒரு அமர்வில் 05 பாடங்களுக்கு குறையாத சித்திகளுடன் ஒன்று அல்லது இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும். வேட்பாளர் ஒவ்வொருவரும் அவர் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மொழிக்குரிய மொழியில்/இலக்கியத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
மேற்குறித்த நோக்கத்துக்குக் கணக்கீட்டியல் கணித பாடமாக கணிக்கப்படமாட்டாது:

குறிப்பு:
இத்தகைமைகளைக் கணிப்புக்கு எடுக்கும் போது பொதுக் கல்விச் சான்றிதழ் உயர்தர பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் ஆகிய இரண்டு பாடங்களில் சித்தியெய்தி இருப்பது பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரண) பரீட்சையில் அப்பாடங்களில் திறமைச் சித்தி பெற்றதற்குச் சமமாகக் கணிக்கப்படும்.

3:1.2. மேலே 3. 1. 1இல் குறிப்பிட்ட தேவைகள் ஏதுவாக இருப்பினும் அங்கீகரிக்கப் பெற்ற பல்கலைக் கழகமொன்றில் பட்டம் பெற்றவர்களும் ஏனைய தேவைகளைத் திருப்திப்படுத்துபவர்களுமான வேட்பாளர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடையவர் ஆவர்.

3:2. நீதித்துறை எழுதுநர் சேவைக்கு ஆட்சேர்க்கப்படுபவர்களுக்கு பின்வரும் தகைமைகள் ஏற்புடையனவாகும்.

3:2.1. சிங்கள அல்லது தமிழ் அல்லது ஆங்கிலத்தை (விசேட சிங்களம் அல்லது விசேட தமிழ் அல்லது) ஒரு பாடமாக கொண்டு உயர் பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல்.

அல்லது

3:2.2. பொதுக் கல்விச் சான்றிதழ் (உயர்தரப்) பரீட்சையில் ஒரு அமர்வில் 04 பாடங்களில் சித்தியெய்தி இருத்தல்: இந்த நான்கு பாடங்களில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் அடங்கியிருக்கவில்லையாயின் வேட்பாளர் பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரண) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

3:2.3. இதற்குச் சமமான ஒரு பரீட்சையில் அல்லது இதனிலும் உயர்ந்த ஒரு பரீட்சையில் சித்தியெய்தி இருப்பதோடு கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் மேலதிகத் தேவைகளில் ஒன்றையாவது பூர்த்தி செய்திருத்தல்; அத்துடன் பொதுக் கல்விச் சான்றிதழ் (உயர்தரப்) பரீட்சையின் தரத்துக்குக் குறையாத தரமுள்ள ஒரு பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலத்தில் சித்தி பெற்றிருத்தல் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் (சிங்கள, தமிழ் அல்லது ஆங்கில) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்மொழி/ இலக்கியம், எண்கணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் ஆகியவற்றில் திறமைச்சித்தி எய்திருப்பதுடன் வேறு ஐந்து (05) பாடங்களிலும் சித்தி எய்திருத்தல் இப்பாடங்களில் 05 பாடங்களிலான சித்திகள் ஒரே அமர்வில் பெறப்பட்டு இருத்தல் வேண்டும். மேலும் தேவையான எண்ணிக்கையில் அமைந்த சித்திகள் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் பெறப்பட்டு இருத்தல் வேண்டும்.

3:3. புகையிரத நிலைய அதிபர்கள் சேவை - வகுப்பு II இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளவர்களுக்கு ஏற்புடைய தகைமைகள் வருமாறு:

3:3.1. மொழி / இலக்கியம் அத்துடன் எண்கணிதம்/கணிதம் / தூயகணிதம் / ஆரம்பகணிதம் / வர்த்தக எண்கணிதம்/அடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் சித்தி எய்திருத்தல்.

அல்லது

3:3.2. பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரணம்)
(அ) சிங்கள / தமிழ்மொழி அல்லது இலக்கியம்
(ஆ) எண்கணிதம் அல்லது கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது ஆரம்பகணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் ஆகிய பாடங்களுடன்

அத்துடன்

(இ) இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் பெற்ற மேலும் நான்கு (04) பாடங்கள் (எனினும், இப்பாடங்களில் ஐந்து (05) சித்திகள் ஒரே அமர்வில் பெறப்பட்டிருக்க வேண்டிய அதே வேளையில் திறமைச் சித்திகள், சிங்கள / தமிழ்மொழி அல்லது இலக்கியம் எண்கணிதம், அல்லது ஆரம்ப கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அடங்கலாக. ஆகக் குறைந்தது நான்கு பாடங்களில் பெறப்பட்டு இருத்தல்வேண்டும்.)

3:3.3. தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியெய்தி இருக்க வேண்டியதுடன், முதல் மொழி (சிங்கள / தமிழ்/ ஆங்கிலம்) கணிதம் அடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகள் ("அ" அல்லது "ஆ") பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

3:3.4. பொதுக் கல்விச் சான்றிதழ் (உயர்தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் நான்கு (04) பாடங்களில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

3:4. அஞ்சல் உத்தியோகத்தர் சேவைக்கு வேட்பாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு ஏற்புடைய கல்வித் தகைமைகள் வருமாறு:

3:4.1. பின்வரும் தகைமைகளில் ஒன்றுடன் பொதுக் கல்விச் சான்றிதழ் (உயர்தரப்) பரீட்சையில் மூன்று (03) பாடங்களில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

3:4.2. சிங்கள / தமிழ்மொழி அல்லது இலக்கியம் எண்கணிதம்/ [illegible] வர்த்தக எண்கணிதம் அடங்கலாக ஆகக் குறைந்தது நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் கூடிய சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ்.

3:4.3. பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரண) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில், ஆறு (06) பாடங்களில் சித்தியெய்தி இருக்க வேண்டியதுடன் ஒரு அமர்வில் ஐந்து (05) பாடங்களில் சித்தி பெற்ற சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி அல்லது சிங்களம் / தமிழ் / ஆங்கில இலக்கியம், எண்கணிதம் / தூயகணிதம் / ஆரம்ப கணிதம் / வர்த்தக எண்கணிதம் / கணிதம் அடங்கலாக. ஆகக் குறைந்தது நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண் வேண்டும்.

3:4.4. தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியெய்தி இருக்க வேண்டியதுடன் முதல் மொழி, கணிதம் அடங்கலாக நான்கு (04) பாடங்களில் "அ" அல்லது "ஆ" தரச் சித்திகளையும் ஏனைய பாடங்களில் "இ" தரச் சித்திகளையும் பெற்றிருத்தல் வேண்டும். வேட்பாளர்கள், ஒரே அமர்வில் முதல் மொழி கணிதம் அடங்கலாக ஐந்து (05) பாடங்களில் சித்தியெய்தி இருக்க வேண்டியதுடன் குறித்த பாடங்கள் அடங்கலாக நான்கு (04) பாடங்களில் "அ" அல்லது "ஆ" தரச் சித்திகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு
பொதுக் கல்விச் சான்றிதழ் (உயர்தரப்) பரீட்சையில் சிங்கள / தமிழ் மொழி, கணிதம் ஆகியவற்றில் எய்தப்படும் சித்தி பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரண) பரீட்சையில் திறமைச் சித்தி எய்தியதற்குச் சமமாகக் கணிக்கப்படும்.

3:5. கணக்குப் பதிவுநர் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பிப்போர் பின்வரும் சான்றிதழ்களில் ஆகக் குறைந்தது ஒன்றையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

3:5.1. (1) சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியெய்தி இருக்க வேண்டியதுடன்
(i) சிங்களம் / தமிழ் மொழி அல்லது இலக்கியம்
(ii) கணக்குப் பதிதல் அல்லது கணக்கீட்டியல் அல்லது வர்த்தகமும் கணக்கியலும்
(iii) கணிதம் அல்லது தூய கணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் ஆகிய பாடங்களில் நான்கு (04) திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

3:5.2. இலங்கைப் பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரண தரப்) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியெய்தியிருப்பதுடன்
(i) சிங்களம் / தமிழ் மொழி அல்லது இலக்கியம்
(ii) கணக்குப் பதிவு அல்லது கணக்கீட்டியல் அல்லது வர்த்தகமும் கணக்கியலும்
(iii) கணிதம் அல்லது எண்கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம்

அல்லது

குறிப்பு
ஒரே அமர்வில் ஐந்துக்கு (05) குறையாத பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது பரீட்சையில் சித்தியெய்திருத்தல் வேண்டும்.

3:5.3. தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் சிங்களம் / தமிழ் மொழி கணிதம் அடங்கலாக நான்கு (04) பாடங்களில் "அ" அல்லது "ஆ" தரச் சித்தியும் எஞ்சிய பாடங்களில் "இ" தரச் சித்தியுமாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

3:5.4. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வர்த்தகச் சான்றிதழ்.

அல்லது

3:5.5. கணக்குப் பதிதலில் டிப்ளோமாச் சான்றிதழ் அல்லது கணக்குப் பரிசோதனை பயிற்சி கணக்குப் பதிதலை ஒரு பாடமாகக் கொண்ட ஆகு செலவு முகாமைத்துவ டிப்ளோமாச் சான்றிதழ்.

அல்லது

3:5.6. இலண்டன் கணக்குப் பதியுநர் நிறுவக இறுதிப் பரீட்சைச் சான்றிதழ்

3:5.7. இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கீட்டியல் டிப்ளோமா இடை நிலைப் பரீட்சைச் சான்றிதழ்.

அல்லது

3:5.8. இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கீட்டியல் நான்கு வருட உயர் தேசிய டிப்ளோமா பாடநெறியில் இரண்டாம் வருட இடை நிலைப் பரீட்சையில் சித்தியெய்திய சான்றிதழ்

அல்லது

3:5.9. இலண்டன் பட்டயச் செயலாளர் நிறுவகத்தின் இடை நிலைப் பரீட்சைச் சான்றிதழ்.

அல்லது

3:5.10. இலண்டன் ஆகுசெலவு முகாமைக் கணக்காளர் நிறுவகத்தின் பகுதி 1 பரீட்சைச் சான்றிதழ்.

அல்லது

3:5.11. இலண்டன் சான்றுபடுத்திய கூட்டுக் கணக்காளர் சங்கத்தின் பகுதி 1 பரீட்சைச் சான்றிதழ்.

அல்லது

3:5.12. கல்வி அமைச்சின் கீழ் அடங்கும் தொழில் நுட்பக் கல்லூரிகளினால் வழங்கப்பட்ட வர்த்தகச் சான்றிதல் அல்லது (கணக்குப் பதியுநருக்கான) உயர் வர்த்தகச் சான்றிதழ்.

அல்லது

3:5.13 இலண்டன் சேம்பர் ஓவ் கொமர்சின் இலங்கைத் திட்டத்தை சேர்ந்த வர்த்தகப் படிப்பு (சாதாரண வர்த்தகப் பிரிவு) அல்லது உயர் வர்த்தகப் படிப்பு (சாதாரண வர்த்தக பிரிவு) சான்றிதழ்.

3:5.14. சிலோன் சேம்பர் ஒப் கொம்மேஸ. கல்வித் திணைக்களம் ஆகியவை அளித்த வர்த்தகப் படிப்புச் சான்றிதழ் (சாதாரண வர்த்தகப் பிரிவு) உயர் தர வர்த்தகப் படிப்புச் சான்றிதழ் (சாதாரண வர்த்தக பிரிவு)

அல்லது

3:5.15. இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் வர்த்தக டிப்புளோமா இடை நிலைச் சான்றிதழ்.

அல்லது

3:5.16. இலங்கைத் தொழிநுட்பக் கல்லூரியின் நான்கு வருட வர்த்தக உயர் தேசிய டிப்புளோமாக் கல்வி நெறியின் இரண்டாம் ஆண்டுச் சான்றிதழ்.

அல்லது

3:5.17. இலங்கைத் தொழிநுட்பக் கல்லூரியின் இரண்டு வருட வர்த்தகப் படிப்புத்துறை தேசிய டிப்புளோமாக் கல்வி நெறியின் சித்திச் சான்றிதழ்.

அல்லது

3:5.18. இலங்கை பரீட்சை திணைக்களத்தின் தொழிற் படிப்புச் சான்றிதழ்.

அல்லது

3:5.19. இலங்கைத் தொழிநுட்பக் கல்லூரியின் நிதிக் கணக்கீட்டியலுடன் கூடிய வணிக நிதித் துறையிலான இரண்டு வருட தேசிய டிப்புளோமாக் கல்வி நெறியில் சித்தியெய்தி இருத்தல்.

அல்லது

3:5.20. இலங்கைத் தொழிநுட்பக் கல்லூரியின் கணக்கீட்டியல் துறையிலான இரண்டு வருட தேசிய சான்றிதழ் கல்வி நெறியில் சித்தியெய்தி இருத்தல்.

அல்லது

3:5.21. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்ற ஒரு பட்டம்.

குறிப்பு
(i) இலங்கை பொதுக் கல்விச் சான்றிதழ் (உயர்தரப்) பரீட்சையில் கணக்கியல் பாடத்தில் சித்தியெய்தி இருப்பது இலங்கை சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது இலங்கை பொதுக் கல்விச் சான்றிதல் (சாதாரண] பரீட்சையில் கணக்குப் பதிதல் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றதாக கணிக்கப்படும்.

குறிப்பு
(ii) பொதுக்கல்விச் சான்றிதழ் (உயர்தரப்) பரீட்சையில் சிங்கள/தமிழ்மொழி, கணிதம் ஆகிய பாடங்களில் சித்தி எய்தி இருப்பது பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரண) பரீட்சையில் திறமைச் சித்திபெற்றதற்குச் சமமாகக் கருதப்படும்.

குறிப்பு
(iii) வேட்பாளர் ஒருவர் மேற்குறித்த பரீட்சைகளில் ஏதாவது ஒன்றுக்குத் தோற்றியிருந்து அதன் பெறுபேறுகள், விண்ணப்ப முடிவுத் திகதி நிகழும் மாதத்துக்கு உடன் முன்பான மாதத்தின் கடைசி நாளிலேயும் பெறப்படாது இருக்குமிடத்து அவர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி அற்றவராக கருதப்படுவார்.

3:6 நிலைய அதிபர் (தரம் II)
இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் வேட்பாளர் முறை நிரலுக்கமைய பணியாற்ற வேண்டும். அவர்கள் 6 X 6 இல் அமைந்த பார்வைப் பரிசோதனையிலும் சித்தியெய்த வேண்டும்.

3:7 புகைவண்டி நேரம் பதியுநர் எழுதுநர் சேவை
இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவோர் அவர்கள் பணியாற்றும் நிலையங்களுக்கமைய முறைமாற்ற அடிப்படையில் பணியாற்ற வேண்டும்.

3:8 அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள் அரசுடைமைக் கம்பனிகள் மற்றும் நேரிணையான நிறுவனங்கள் ஆகியவற்றில் எழுதுநர் பதவிக்கு பின்வரும் தகைமைகள் ஏற்புடையது.

3:8.1. பொதுக் கல்விச் சான்றிதல் (சாதாரண தர) / தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியெய்தி இருக்க வேண்டியதுடன் எண் கணிதம்/கணிதம் / வர்த்தக எண் கணிதம் சிங்களம் / தமிழ் அடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளும் ஒரே அமர்வில் பெற்றிருத்தல் வேண்டும்.

## 4.0 வயது

4.1. அரசாங்க சேவைப் பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் வேட்பாளர்கள் விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். அரச கூட்டுத்தாபனங்கள்/நியதிச் சபை பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராயிருத்தல் வேண்டும்.

4.2. அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிப்போர். அரசாங்கச் சேவையில் தொடர்ச்சியாக குறைந்தது ஒரு வருடமாவது பூர்த்தி செய்த தற்காலிக நியமனம் பெற்றவர்கள்: அரச சேவையில் கூட்டு மொத்தமாக ஒரு வருட சேவையைப் பூர்த்தி செய்த அமய நியமனங்கள் பெற்றவர்கள் ஆகியோர் 45 வயதுக்குக் குறைந்தவராயிருப்பின் அரச சேவைக்கு (கூட்டுத்தாபன சேவைக்கு அல்ல) விண்ணபிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

குறிப்பு
தமக்கு அளிக்கப்பட்ட சலுகையின் அடிப்படையில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியெய்தும் அரச பணியாளர் நியமனம் வழங்கப்படும் வேளையில் வர்த்தமான அறிக்கையில் வெளியிடப்பட்ட தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டியதுடன் அதே சேவையில் அமர்த்தப்படவும் வேண்டும்.

## 5.0 வதிவிடம்

5.1. (அ) சேவைக்கான ஆட்சேர்ப்பு பிரதிநிதித்துவ அடிப்படையில் செய்யப்படும். உதாரணமாக விதித்துரைத்த எண்ணிக்கையிலான பதவி வெற்றிடங்கள்: சனத்தொகை விகிதாசார அடிப்படையில் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்துக்கும் ஒதுக்கப்படும். மாவட்டத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்குப் போட்டியிட அந்தந்த மாவட்டத்திலுள்ள விண்ணப்பகாரர் மட்டுமே தகுதியுடையவராவர்,

(ஆ) ஒரு மாவட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தேவையான தகுதிகள் ஆட்சேர்ப்புத் தேவைக்கென ஒவ்வொரு வேட்பாளரும் குறிப்பிட்ட மாவட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவர். ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தைச் சேர்ந்தவராகக் கருதப்படுவதற்கு வேட்பாளர் ஒருவர் பின்வரும் தேவைகளில் ஆகக்குறைந்தது ஒன்றையாவது பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:-

(i) அம்மாவட்டத்தில் பிறந்தவராயிருத்தல் வேண்டும். அல்லது
(ii) பரீட்சை விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முந்திய ஆறு (06) வருடங்களுள் ஆகக் குறைந்தது மூன்று (03) வருடங்களாவது அம்மாவட்டத்தில் நிரந்தரமாகக் குடியிருந்தவராயிருத்தல் வேண்டும்.
(iii) அம் மாவட்டத்தில் தொடர்ச்சியாக ஐந்து (05) வருடங்கள் இரண்டாம் நிலைப் பள்ளிப் படிப்பை மேற்கொண்டவராயிருத்தல் வேண்டும்.

குறிப்பு
(1) வேட்பாளரின் தந்தை அல்லது தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க மாற்றத்தகு சேவையில், உள்ளூராட்சி / அரச சேவையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் பணியாற்றுபவராயிருப்பின் வேட்பாளர். தனது பிறப்பிடத்தையோ அல்லது தந்தை அல்லது தாயினது பிறப்பிடத்தையோ அவர் சேர்ந்த மாவட்டமாகத் தெரிவு செய்ய அனுமதிக்கப்படுவர்.

(2) எந்த ஒரு வேட்பாளரும் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டத்தில் வெற்றிடங்களுக்கு போட்டியிடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். எனவே ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்ட உரிமையுடைய வேட்பாளர் தாம் மிகவும் விரும்பும் ஒரு மாவட்டத்தையே தெரிவு செய்ய வேண்டும். (வேட்பாளர் தெரிவு செய்யும் மாவட்டம் மேலே குறிப்பிட்ட தேவைகளின்படி வேட்பாளர் உரிமை கோரக் கூடிய ஒரு மாவட்டமாயிருத்தல் வேண்டும்) விண்ணப்பத்தில் தான் மிகவும் விரும்பும் மாவட்டத்தைக் குறிப்பிட்டபின் வேட்பாளர் அதனை மாற்றமுடியாது.

5.2: வேட்பாளர்கள் தமது நிரந்தர வதிவிடத்துக்கு ஆதரவான பின்வரும் பத்திரங்களைத் தேவைப்படும் போது சமர்ப்பிப்பதற்கு கடப்பாடுடையவராவர்:-

(i) விண்ணப்ப முடிவு திகதிக்கு உடன் முன்பான மூன்று வருடங்களுக்கான தேர்தல் இடாப்புப் பிரதிகள்.
(ii) பிரதேசச் செயலாளர் முறைப்படி ஒப்பமிட்ட கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பெற்ற வதிவுச் சான்றிதழ்.
(iii) பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ்களின் பிரதி.

6.0. அரசாங்க சேவையில்/அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் சேவையில் 1992-04-01 இலோ அதற்கு முன்னரோ பணிக்கமர்த்தப்பட்டிருந்து / தற்போது பணிக்கமர்த்தப்பட்டிருக்கும், அமயநிலை, பிரதியீட்டு, தற்காலிக மணியாளர்களும் அரசாங்க தாபனங்களைச் சேர்ந்தவர்களாக உள்ள எல்லாப் பயிலுநர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் வழக்கமான நடைமுறைகளுக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்ய பெறுவதற்கும் அவர்கள் பரீட்சையில் பெறும் அவர்களது புள்ளிகளுடன் பின்வரும் சலுகைப் புள்ளிகளைச் சேர்க்கப் பெறுவதற்கும் உரித்துடையவர்களாவர். ஆயின் அவர்கள் ஆட்சேர்ப்புத் திட்டத்திற் குறிப்பிடப் பெற்றவாறான தகைமைகளை நிறைவேற்றி இருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| 3 வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக்குச் சலுகைப் புள்ளிகள் | 25% |
| 2 வருடச் சேவைக்கான சலுகைப் புள்ளிகள் | 15% |
| 1 வருடத்துக்குக் குறைந்த சேவைக்கான சலுகைப் புள்ளிகள் | 10% |

7.0. தற்போதுள்ள பதவி வெற்றிடங்களில் மூன்று (03) சதவீதம் உடற்குறையுள்ள ஆட்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தகைமை பெறும் உடற்குறையுள்ள ஆட்கள் நியமனத்திற்குத் தெரிவு செய்யப் பெறுவர். நியமனத்துக்கு தெரிவு செய்யப் பெறுவதற்கு வேட்பாளர்கள் பெற வேண்டிய ஆகக் குறைந்த புள்ளி 40% ஆகும். நியமனத்துக்குத் தெரிவு செய்யப் பெறும் வேட்பாளர் ஒருவர் தனது உடற்குறையையும் அது அவரது பதவியில் அவர் கடமை ஆற்றுவதற்கு இடைஞ்சலாக இருக்காது என்பதையும் தாபிப்பதற்கு மருத்துவ நிபுணர் ஒருவரிடமிருந்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

8.0. வன்முறை முயற்சிகளால் பாதிப்புற்ற பின்வரும் நிலைமைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிலைமைகள் காணப்படுகின்ற குடும்பத்தின் தொழில் வாய்ப்பு அற்ற உறுப்பினர் ஒருவருக்கு பின்வரும் சலுகைகள் வழங்கப்படும்:
முன்னைய சந்தர்ப்பம் ஒன்றில் இச்சலுகையைப் பயன்படுத்திய குடும்பங்களின் உறுப்பினர்கள் அதனை மீண்டும் கோருவதற்கு உரித்துடையவர்கள் அல்லர்.

8.1.

| ஏற்பட்ட இடர் | சலுகை |
|---|---|
| (i) தகப்பன் அல்லது தாய் கொல்லப்பட்டு இருத்தல் | 25% |
| (ii) கணவன் அல்லது மனைவி கொல்லப்பட்டு இருத்தல் | 25% |
| (iii) குடும்பத்துக்கு ஆதரவளித்த சகோதரர் அல்லது சகோதரி கொல்லப்பட்டிருத்தல் | 25% |
| (iv) ஆதனம் முற்றாக அழிக்கப்பட்டு இருத்தல் | 20% |
| (v) மேலே (i), (ii) அல்லது (iii) இல் குறிப்பிடப்பட்ட எவரேனும் ஆளின் நிரந்தர முழுமையான இயலாமை ஏற்பட்டிருத்தல் | 25% |

(vi) மேலே (i), (ii) அல்லது (iii) இல் குறித்துரைத்த எவரேனும் ஆள் பகுதியான, நிரந்தர ஏலாமையுற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் ஏலாமையின் நூற்றுவீதப்படி 25% புள்ளிகளின் விகித சமத்தொகை வழங்கப்படும்.
(vii) குடும்பத்தில் ஒருவருக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கொல்லப்பட்டு இருக்குமிடத்து 10 மேலதிகப் புள்ளிகள் வழங்கப்படும்.

குறிப்பு

இச்சலுகை நூற்றுவீதப் புள்ளிகளைக் கணிப்பதற்கான அடிப்படை வேட்பாளர் பரீட்சையில் சம்பாதிக்கும் புள்ளிகளின் மொத்த எண்ணிக்கை ஆகும். மேற்குறித்த நிலைமைகளின் தொழிற்பாட்டில் பல நிகழ்வுகள் இடம் பெற்றிருக்கும் போது, மிக்க அனுகூலமுள்ள நிலைமைக்கு ஒதுக்கப்பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை மட்டும் வழங்கப்படும். ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கொல்லப்பட்டிருப்பின் வேட்பாளருக்கு பத்து மேலதிகப் புள்ளிகள் வழங்கப்படும். இந்தச் சலுகை, 1987. 07 01 முதல் விண்ணப்ப முடிவுத் திகதி வரையில் இடம் பெற்ற வன்முறை முயற்சிகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

8.2. இச்சலுகைக் கோரும் வேட்பாளர்கள் கேட்கப்படும்போது பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) மேலே (i), (ii), (iii) இல் குறிப்பிடப் பெற்ற இடருக்கு ஆதரவாக:- தகப்பன்/தாய்/சகோதரன்/சகோதரி/கணவன்/மனைவி கொல்லப்பட்டவிடத்து:
(i) மரணச் சான்றிதழ்.
(ii) மரணத்துக்குக் காரணம் வன்முறை

(6 ஆம் பக்கம் பார்க்க)

படிவம் இல: 1 [ ]

(அலுவலக உபயோகத்துக்கு மட்டும்)

மாதிரி விண்ணப்பப் படிவம்

எழுதுநர் சேவைக்கும் இணைந்த சேவைகளுக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பொதுப் போட்டிப் பரீட்சை - 1994

(கூடுகளில் சரியான குறியீட்டை/இலக்கத்தை இடுக:

01. விண்ணப்பித்த நகரம்: (பரீட்சை நிலையங்கள் அமைந்துள்ள இடங்களுக்கும் அவற்றின் இலக்கங்களுக்கும் அட்டவணையைப் பார்க்க):
(1) முதலாவதுதெரிவு: ..........
நகரத்தின் பெயர்
நகர இல: [ ]
(2) இரண்டாம் தெரிவு: ..........
நகரத்தின் பெயர்:
நகர இல: [ ]

02. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்: ..........
(ஆ) முழுப் பெயர்: ..........
(1) ஆங்கிலத்தில்: ..........
(2) சிங்களத்தில்: ..........
அல்லது
(3) தமிழில்: ..........

03. ஆணா பெண்ணா என்பது:
பெண் 1 ஆண் 2 [ ]

04. நுழைவு அட்டை அனுப்ப வேண்டிய முகவரி:
(அ) ஆங்கிலத்தில்: ..........
(ஆ) சிங்களத்தில் அல்லது தமிழில்: ..........

05. நிரந்தர முகவரி: ..........
(i) நிரந்தர வசிப்பிட மாவட்டம்: ..........
(ஆங்கிலத்தில்) [ ]
(ii) மாவட்ட இல: ..........

06. (i) நியமனம் நாடும் மாவட்டம் (ஆங்கிலத்தில்): .......... [ ]
(ii) மாவட்ட இல:

07. பரீட்சையின் மொழி மூலம்:
சிங்களம் —S தமிழ் T— ஆங்கிலம் —E

08. இனத் தொகுதி

| | | | |
|---|---|---|---|
| சிங்களம் | 1 | பேகர் | 5 |
| இலங்கைத் தமிழர் | 2 | மலே | 6 |
| முஸ்லிம் | 3 | ஏனையோர் | 7 |
| இந்தியத் தமிழர் | 4 | | |

[ ]

09. வர்த்தமானி அறிவித்தலின் 8.0ஆம் பந்தியின் கீழ் நீர் சலுகைகளுக்கு விண்ணப்பிக்கிறீரா?
ஆம் - 1 இல்லை - 2 [ ]

10. வர்த்தமானி அறிவித்தலின் 6.0ஆம் பந்தியின் கீழ் சலுகைப் புள்ளிகளுக்கு உரித்துடையீரா?
ஆம் - 1 இல்லை - 2 [ ]

11. நீர் வர்த்தமானி அறிவித்தலின் 7 0ஆம் பந்தியின் படி புனர்வாழ்வளிப்புச் சுற்றறிக்கை நிபந்தனைகளின் கீழ் பரீட்சைக்குத் தோற்றுகிறீரா?
ஆம் - 1 இல்லை - 2 [ ]

12. கணக்குப் பதிதல் பரீட்சைக்கு நீர் தோற்றுகிறீரா?
ஆம் - 1 இல்லை - 2 [ ]

13. தேசிய அடையாள அட்டை இல: ..........

14. பிறந்த திகதி:
ஆண்டு: .......... மாதம்: ..........
திகதி: ..........

15. 1994-05-31 இல் வயது;
ஆண்டுகள்: .......... மாதங்கள் ..........
நாட்கள்: ..........

16. மாவட்டத்தில் நீர் எப்போது முதல் வசிக்கிறீர்: ..........

16. 1. பிரதேச உதவி அரசாங்க அதிபர் பகுதி/ பிரதேசச் செயலாளர் பகுதி: ..........

16. 2 கிராம உத்தியோகத்தர் பகுதி: ..........

17. பொ. க. சா. (சாதாரணம்) / தே. பொ. க. சா. பரீட்சை விவரங்கள்
முதலாவது அமர்வு:
(1) பரீட்சையின் பெயர்: ..........
(2) பரீட்சைத் திகதி, மாதம்: ..........
(3) வேட்பாளரின் சுட்டு இல: ..........

(4)

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| .......... | .......... | .......... | .......... |
| .......... | .......... | .......... | .......... |
| .......... | .......... | .......... | .......... |
| .......... | .......... | .......... | .......... |

17. 1. பொ. க. சா. (சாதாரணம்)/தே. பொ. க. சா. பரீட்சை விவரங்கள்:
இரண்டாம் அமர்வு:
(1) பரீட்சையின் பெயர்: ..........
(2) பரீட்சைத் திகதி மாதம்: ..........
(3) வேட்பாளரின் சுட்டு இல. ..........

(4)

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| .......... | .......... | .......... | .......... |
| .......... | .......... | .......... | .......... |
| .......... | .......... | .......... | .......... |
| .......... | .......... | .......... | .......... |

17. 2. பொ. க. சா. (உ/த) பரீட்சையில் சித்தியெய்தியிருந்தால்

| பாடம் | தரம் | பரீட்சை நிலையமும் ஆண்டும் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

17.3 வேட்பாளர் அங்கீகரிக்கப்பெற்ற பல்கலைக் கழகம் ஒன்றின் பட்டத்தைப் பெற்றிருந்தால்:
1. பல்கலைக்கழகத்தின் பெயர்: ..........
2. பட்டம்: ..........
3. பரீட்சை நிகழ்ந்த ஆண்டு: ..........

18 0 ஏனைய தகைமைகள்: ..........

19.0 நீர் சட்டமன்று ஒன்றில் ஏதாவது தவறுக்காகக் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளீரா?
ஆம் [ ]
இல்லை [ ]
ஆம் எனின் விவரம்: ..........

20.0 பரீட்சைக் கட்டணம் வைப்புச் செய்த அஞ்சல் அலுவலகம்: ..........
பற்றுச் சீட்டு இலக்கமும் திகதியும்: ..........
(பற்றுச் சீட்டின் பிரித்தெடுக்க முடியாத வகையில் இங்கு ஒட்டப்படுதல் வேண்டும்.)

21.0 வேட்பாளரின் சான்றிதழ்:
(அ) இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விவரங்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகிறேன்.
ஏதாவது தகவல் பூர்த்தி செய்யப்படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் ஈண்டு பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் அல்லது அவை இரண்டினதும் விளைவாக ஏற்படக் கூடிய ஏதாவது இழப்பை நான் எதிர்கொள்வதற்கு உடன்படுகிறேன்
(ஆ) இதில் அடங்கியுள்ள விவரங்களில் எவையேனும் பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்துக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும் சரியின்மை நியமனத்துக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதை நான் அறிவேன்.
(இ) இப் பரீட்சை தொடர்பான நிபந்தனைகள் அனைத்துக்கும் அமைந்தொழுக நான் இத்தால் உடன்படுகிறேன்.

..........
விண்ணப்பகாரரின் கையொப்பம்
திகதி: ..........

22.0 விண்ணப்பகாரரது ஒப்பத்தை உறுதிப்படுத்தல்;
இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் .......... என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்பதையும் அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் 1994.......... ஆகிய இன்று இட்டார் என்பதையும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

..........
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரது கையொப்பம்
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரது முழுப் பெயர்: ..........
பதவிப் பெயர்: ..........
முகவரி: ..........
திகதி: ..........
உத்தியோக முத்திரை: ..........

படிவம் இல. II
அலுவலகத் தொடர்பு இல: ..........

1992 - 03 - 24 தேதியிட்ட 17/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் நியதிகளின் படி சலுகைப் புள்ளிகளுக்குரிய மாதிரி விண்ணப்பப் படிவம்

பகுதி I; ..........

(வேட்பாளர் நிரப்புதல் வேண்டும்

1. முழுப் பெயர்: ..........
2. (அ) தற்போதைய முகவரி: ..........
(ஆ) கிராம உத்தியோகத்தர் பகுதியும் இலக்கமும்: ..........
(இ) பிரதேச செயலாளர் பகுதி: ..........
(ஈ) மாவட்டம்: ..........
3. சிவில் அந்தஸ்து:-
(அ) திருமணமானவரா? / திருமணமாகாதவரா?
(ஆ) திருமணஞ் செய்திருந்தால்
(1) திருமணம் செய்த திகதி: ..........
(2) வாழ்க்கைத் துணையின் பெயர்: ..........
4. குடும்பத்தில் உயிர் வாழ்பவர்களின் விபரங்கள்:-

| பெயரும் முகவரியும் | வயது | சிவில் அந்தஸ்து | உறவு முறை |
|---|---|---|---|
| .......... | .......... | .......... | .......... |
| .......... | .......... | .......... | .......... |

5. உமக்குச் சொந்தமான ஆதனங்களை தனித்தனியாகக் குறிப்பிடுக. நீர் விவாகஞ் செய்யாதிருந்தால் உமது பெற்றோருக்குச் சொந்தமான, உமது விவாகமாகாத சகோதரர்களுக்கு, சகோதரிகளுக்குச் சொந்தமான ஆதனங்களைத் தருக.

| அ) காணியின் பெயரும் பரப்பளவும் | அமைவிடம் (அமைவிட முகவரி) | ஊரிலுள்ள வீடுகள், சொத்துகள் தொடர்பான விபரங்கள் |
|---|---|---|
| | | |

| ஆ) நீர் வசிக்கும் வீடு, வீட்டு இலக்கமும் முகவரியும் (அமைவிடம் குறிப்பிடுக) | தளபாடங்களும் பிற உபகரணங்களும் தளபாடங்கள், உபகரணங்களின் குறித்துரைத்த பொருள்கள் | அவற்றின் பெறுமானம் |
|---|---|---|
| | | |

| இ) மோட்டார் கார்/மோட்டார் படகுகள் போன்றவை வாகனத்தின் தன்மை | ஆக்கம் | பதிவு இலக்கம் |
|---|---|---|
| | | |

| ஈ) முதலீடுகள் முதலீட்டாளர் பெயர் | வங்கியின்/ கம்பனியின் பெயர் | தொகை (ரூபா) |
|---|---|---|
| | | |

உ) ஏனைய ஆதனங்கள் (விபரங்கள் தருக): ..........

6. திருமணமானவராயிருப்பின் உமது வாழ்க்கைத்துணை அல்லது பிள்ளைகளின் ஆதனம்
(அ) வேறு காணி அல்லது கட்டடம்:

| காணியின் பெயர் | அமைவிடம் | ஏக்கரளவு |
|---|---|---|
| | | |

(ஆ) வாகன/மோட்டார் படகு ஆகியன:

| வாகனத்தின் தன்மை | ஆக்கம் | பதிவு இலக்கம் |
|---|---|---|
| | | |

(இ) முதலீடுகள்:

| முதலீட்டாளரின் பெயர் | வங்கியின் / கம்பனியின் பெயர் | தொகை (ரூபா) |
|---|---|---|
| | | |

(ஈ) வேறு ஆதனங்கள் (விபரங்கள் தருக): ..........

7. விண்ணப்பித்துள்ள பதவியின் அல்லது நீர் தோற்றிய பரீட்சையின் விவரங்கள்:-
(அ) விண்ணப்பித்த பதவி / பரீட்சையின் பெயர்;
(ஆ) பரீட்சைத் திகதி:-
(இ) நீர் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாவட்டம்:-
(ஈ) சுட்டிலக்கம்

8. 1992-03-24 திகதியிட்ட 17/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் நியதிகளின்படி சலுகைப் புள்ளிகளைப் பெறுவதற்கு உமக்கு உரிமை இருந்தால் சலுகைகள் வழங்குவதற்குரிய I முதல் VI வரையிலான விடயங்களில் உமக்கு ஏற்புடைய விடயங்களை சரியாகக் குறிப்பிடுக:
2 (i), 2 (ii), 2 (iii), 2 (iv), 2 (v), 2 (iv)
(பொருத்தமற்றதை நீக்கிவிடுக)

9. அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் விடயம் 2 (i), 2 (ii), அல்லது 2 (iii) இன் கீழ் சலுகைப் புள்ளிகளைப் பெறுவதற்கு உமக்கு உரிமையிருந்தால் பின்வரும் விவரங்களைத் தருக!-
(அ) வன்முறையினால் கொல்லப்பட்ட ஆளின் / ஆட்களின் பெயரை / பெயர்களைத் தருக. ..........
(ஆ) கொல்லப்பட்ட ஆளுடன்/ஆட்களுடன் உமது உறவு முறை:
(இ) அவர்கள் கொல்லப்பட்ட நேரத்தில் அவர்கள் விவாகமாகி அல்லது விவாகமாகாது இருந்தவர்களா என்பதைக் குறிப்பிடுக: ..........
(விவாகமானவர்கள் / விவாகமாகாதவர்கள்.)
(ஈ) அவர் / அவர்கள் விவாகம் செய்திருந்தால் வாழ்க்கைத் துணையின்/வாழ்க்கை துணைகளின் பெயரை / பெயர்களைத் தருக:- ..........
(உ) மரணமடைந்த போது அவரின் /அவர்களின் முகவரி ..........

10. அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 2 (iv) ஆம் பந்தியின் கீழ் சலுகைப் புள்ளிகளைப் பெறுவதற்கு உமக்கு உரிமை இருந்தால் பின்வரும் விவரங்களைத் தருக!-
(அ) வன்முறைகளில் அழிக்கப்பட்ட சொத்துக்களின் விவரங்கள்:- ..........
(ஆ) அச்சம்பவங்கள் நிகழ்ந்த திகதி:- ..........
(இதற்கு ஆதரவான ஆவணங்கள் இணைக்கப்படுதல் வேண்டும்)
(இ) சொத்துக்கள் பூரணமாக அழிக்கப்பட்டனவா? / அழிக்கப்படவில்லையா?

11. அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 2 (v) ஆம் பந்தியின் கீழ் அல்லது 2 (vi) ஆம் பந்தியின் கீழ் சலுகைப் புள்ளிகளைப் பெறுவதற்கு உமக்கு உரிமை இருந்தால் பின்வரும் விவரங்களைக் குறிப்பிடுக.
..........
(அ) பாதிப்புற்றவரின்/பாதிப்புற்றவர்களின் பெயர்/பெயர்கள் ..........
(ஆ) அவர்களுடன் உமது உறவு முறை!-
(இ) பாதிப்புற்றவரின் சிவில் அந்தஸ்து (விவாகமானவர் / விவாகமாகாதவர்)
..........
(ஈ) ஏலாமையுற்ற நேரத்தில் பாதிப்புற்றவரின் / பாதிப்புற்றவர்களின் முகவரி/ முகவரிகள்;- ..........
மருத்துவ சபையினதும் பொலிஸினதும் அறிக்கையின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

12. பந்தி 02 இல் குறிப்பிட்டவாறு மேலதிகமாக 10 புள்ளிகளைப் பெறுவதற்கு உரிமை உண்டா?

13. மேற்குறித்த அரசாங்கச் நிருவாகச் சுற்றறிக்கையின் நியதிகளின்படி உமது குடும்பத்தில் உள்ள எவராவது ஏற்கனவே சலுகை வழங்கப் பட்டுள்ளாரா?
வழங்கப்பட்டிருந்தால் விபரங்களைத் தருக)

14. அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 7ஆம் பந்தியில் நியதிகளின்படி சலுகைப் புள்ளிகளைப் பெற உமது குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்கள் உடன்பட்டுள்ளனரா?
..........
(இந்த பிரகடனம் பிரதேசத்தின் கிராமஉத்தியோகத்தரின் முன்னிலையில் குடும்ப உறுப்பினர்கள் அனைவராலும் ஒப்பமிடப்பட்டு பிரதேசச் செயலாளரது புறக் குறிப்புடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். பிரகடனத்தின் பிரதி ஒன்று பிரதேசச் செயலாளரிடம் வைப்பிலிடப்படுதல் வேண்டும்;

15. இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விவரங்கள் எனது அறிவுக்கு எட்டிய வரை உண்மையானவை எனவும் சரியானவை எனவும் நான் பயபக்தியுடன் வெளிப்படுத்துகிறேன். ஈண்டு தரப்பட்டிருக்கும் விவரங்களில் எவையேனும் பொய்யானவை என நியமனத்துக்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்டால் தகைமை நீக்கத்துக்கும் சரியின்மை நியமனத்துக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதை நான் அறிவேன்.

திகதி.......... ..........
விண்ணப்பகாரரின் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)
நடவடிக்கைதான் என்பதை உறுதிப்படுத்திய பிரேதப் பரிசோதனை அறிக்கை தீர்ப்பு
(iii) சம்பவம் தொடர்பில் பொலிஸுக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரதியும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கையும்;
(iv) வேட்பாளர் இறந்தவரது குடும்ப அங்கத்தவர்களுள் ஒருவர் என்பதற்கு அப்பகுதிப் பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்.
(v) காலமானவரது திருமணச் சான்றிதழ்.
(ஆ) (iv) இடருக்கு ஆதாரவாக —
ஆதனம் முற்றாக அழிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில்
(i) அழிக்கப்பட்ட ஆதனம் அவருக்கு அல்லது அவரது குடும்ப அங்கத்தவருக்கு சொந்தமாயிருந்தது என்பதற்கான சான்றிதழ் (பதிவு இலக்கத்தைப் பொறுத்த மட்டில் காணிப் பதிவாளரால் வீடுகள் அமைந்திருந்த காணியின் உரிமை சான்றுப்படுத்தப்பட்ட பத்திரப் பகுதியின் பிரதி)
(ii) பொலிஸுக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரதி
(iii) முற்றாக அழிக்கப்பட்ட ஆதனத்தின் வருமதி தொடர்பாக பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்.
(இ) இடருக்கு ஆதாரவாக— ஒன்றுக்கு மேற்பட்ட குடும்ப அங்கத்தவர் கொல்லப்பட்டிருப்பின், அவரது மரணச் சான்றிதழும் மேலே (அ) வில் குறிப்பிடப்பட்ட பத்திரங்களும்
(ஈ) (vi), (vii) இடருக்கு ஆதாரவாக—
(i) பொலிஸுக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரதியும் பொலிஸ் புலனாய்வு அறிக்கையையும்.
(ii) இவ்வறிவித்தலின் பந்தி 8.3 இல் குறிப்பிடப்பட்ட பிரதேச செயலாளரின் சான்றிதழும் வைத்தியச் சான்றிதழும்.

8.3. மேற் கூறப்பட்ட (v) அல்லது (vi) இன் கீழ் வரும் பாதிக்கப்பட்டவர் அத்தகைய எந்த உடற் காயங்களைப் பற்றியும் அப்பகுதியின் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவிக்க வேண்டும். அவர் காயத்தை வகைப்படுத்துவதற்கும், இயலாமை / சம்பாதிக்கும் ஆற்றல் இழப்பைத் தீர்மானிப்பதற்கு வைத்திய சபை ஒன்றை நியமிப்பார். மேலும், பாதிக்கப்பட்டவர் அத்தகைய உடற் காயங்களைப் பற்றி பொலிஸுக்கும் பிரதேச செயலாளர் / அப்பிரதேசத்தின் மேலதிக அரச அதிபர் ஆகியோருக்கும் அறிவிக்க வேண்டும். அவர் சம்பவத்தை புலனாய்வு செய்து பாதிக்கப்பட்டவர். வன்முறை நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ளரா எனத் தீர்மானிப்பர்.

8.4. வன்முறையால் பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த வேட்பாளரைப் பொறுத்த மட்டில் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பப்படும் விதந்துரைக்கப்பட்ட விண்ணப்ப படிவம் இல. 1 இன் 09 ஆம் விடயத்தில் அவர் சலுகை புள்ளிகளைக் கோருகின்றாரா எனக் குறிப்பிட வேண்டும்.

8.5. தொடர்புள்ள நியமிப்பு அதிகாரி, சலுகைப் புள்ளிகளைக் கோரும் விண்ணப்பதாரர்களுக்கு II ஆம் III ஆம் இலக்கப் படிவங்களைப் பூர்த்தி செய்து அனுப்பும் படி அறிவிப்பார்

9.0. விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் அந்தந்த பதவிகளுக்குத் தேவைப்படும் எல்லாத் தகைமைகளையும் வேட்பாளர் பெற்றிருத்தல் கட்டாயமாகும்.

10.0. பரீட்சைத் திட்டம்

10.1. மொழி ஆற்றல், உளச்சார்பு எனும் இரண்டு வினாப் பத்திரங்களைக் கொண்ட பரீட்சை ஒன்றுக்கு ஒவ்வொரு வேட்பாளரும் தோற்ற வேண்டும்.
கணக்குப் பதியுனர் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பகாரர் இவ்வினாப் பத்திரங்களுடன் கணக்குப் பதிதல் பத்திரம் ஒன்றுக்கும் தோற்ற வேண்டும். இம்மூன்று வினாப் பத்திரங்களுக்கும் அவர்கள் பெறும் புள்ளிகளின் அடிப்படையில் விண்ணப்பகாரரின் திறமை தீர்மானிக்கப்படும்.

10.2. மொழி மூலம்
இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடத்தப்படும். வேட்பாளர்கள் இம்மூன்று மொழிகளில் ஏதாவது ஒன்றில் மட்டும் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

10.3. பாடத்திட்டம்

10.3.1. மொழித் திறன்
1½ மணித்தியால புறவய வகை வினாத்தாள் ஒன்று எண்ணங்களை வெளிப்படுத்துவதற்குரிய மொழி அறிவு, கிரகித்தல் திறமை, வாக்கிய அமைப்பு, எளிய இலக்கணம் ஆகியவற்றைச் சோதிப்பதற்கென வடிவமைத்த வினாக்களைக் கொண்டிருக்கும் (100 புள்ளிகள்)

குறிப்பு:
வேட்பாளர்களின் கையெழுத்து பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

10.3.2. உளச்சார்புச் சோதனை;- ஒரு மணித்தியால புறவய வினாத்தாள் ஒன்று கூட்ட எண்கள், சொல்லமைப்புத் திறன் பொது விவேகம் போன்றவற்றைக் கொண்டிருக்கும் - (100 புள்ளிகள்)

10.3.3. கணக்குப்பதிதல்:- பொதுக்கல்விச் சான்றிதழ் (சாதாரண) தரத்தில் அமைந்த 1½மணித்தியால வினாத்தாள் ஒன்று கூட்டல் எண்கள் அடங்கலாக எண் கணிதம் கணக்குப் பதிவின் அடிப்படை அறிவு ஆகியவற்றைக் கொண்டிருக்கும் (100 புள்ளிகள்) —

11.0 வெற்றிபெறும் வேட்பாளர்கள் பெறவேண்டிய புள்ளிகள் இன அடிப்படையிலான தெரிவு போன்ற ஏனைய பரிசீலனைகள் எவ்வாறு இருப்பினும் ஆகக் குறைந்து 40% ஆக இருத்தல் வேண்டும்.

12.0 பிழையான தகவல் வழங்குவதற்குரிய தண்டனை-
வேட்பாளர்கள் தமது விண்ணப்பங்களில் சரியான விபரங்களைச் சேர்த்துக் கொள்வதில் மிக்க கவனஞ் செலுத்துதல் வேண்டும் இப் பரீட்சையின் விதிகள் ஒழுங்கு விதிகளின் படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எந்த ஒரு வேட்பாளராவது தகுதியற்றவர் என அறியப்படின் பரீட்சை நடக்கும் போதோ பரீட்சைக்கு முன்னரே அல்லது பரீட்சைக்கு பின்னரே அவரது வேட்பாளர் நிலை இரத்துச் செய்யப்படும் வேட்பாளர் தரப்பட்ட விபரங்கள் தவறானவை என்றோ அல்லது அவர் வேண்டுமென்றே உண்மையை மறைத்துள்ளாரென்றோ அறியப்படின் அவர் அரச சேவையிலிருந்து வேலை நீக்கம் செய்யப்படலாம்.

12.1 பரீட்சைக் கட்டணம்
பரீட்சைக் கட்டணம் 100ரூபாவாகும். இக் கட்டணத்தை எந்த ஒரு தபாற் கந்தோரிலும் செலுத்த முடியும். விண்ணப்பத்தில் பொருத்தமான கூட்டினுள் பற்றுச் சீட்டினை கழற்ற முடியாதவாறு ஒட்ட வேண்டும். (உமது எதிர்காலத் தொடர்புக்காக பற்றுச் சீட்டு இலக்கம் திகதி தபாற்கந்தோர் ஆகியன குறித்து வைக்கப்பட வேண்டும் எக் காரணத்தைக் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிப்பு செய்யப்படமாட்டாது.

13.0 விண்ணப்பங்கள் —
விண்ணப்பங்கள் பின்வருமாறு தயாரிக்கப்பட வேண்டும்.
(அ) அளவு ஏ4 (21 X 29 செ. மீ ) (சாதாரண அரைத் தாளளவு)
(ஆ) பக்கம் 1:01. இலிருந்து 12 வரை
(இ) பக்கம் 2:13 இலிருந்து 17.1 வரை
(ஈ) பக்கம் 3:17.2 இலிருந்து 22 வரை
விண்ணப்பங்கள் இரு தாள்களில் தயாரிக்கப்பட வேண்டும். பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் தொடர்பாக ஏற்படும் இழப்புக்கு விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

13.1 வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளில், விதித்த பரீட்சைக் கட்டணத்தை முடிவு திகதி அன்றோ அதற்கு முன்னரோ செலுத்தி விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர் அனைவரும் பரீட்சை ஆணையாளரால் ஒரு போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.
போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான பிரவேச அட்டை வழங்கப்பட்டமை வேட்பாளர் இப்பதவிக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது. வேட்பாளர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பின் வர்த்தமான அறிவித்தலுக்கமைய தேவையான தகுதிகளை அவர் கொண்டிருக்கவில்லையெனில் வேட்பாளர் அப்பதவிக்கு போட்டியிடுவது இரத்துச் செய்யப்படும்.

13.2 விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் மேல் இடப் பக்க மூலையில் "1994- எழுதுநர், இணைந்த சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொதுப் போட்டிப் பரீட்சை" என்று வதிவிட மாவட்டமும் குறிப்பிடப்பட வேண்டும்.

13.3. விண்ணப்பப் படிவத்திலுள்ள வேட்பாளரின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, படைதாங்கு சேவையின் ஆணைப்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர், ஆண்டுச் சம்பளமாக ரூபா 38 760க்கு மேல் பெறும் அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுபடுத்தப்படவேண்டும்.

13.4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 1994 ஜூன் 17க்கு முன்னர் பின்வரும் விலாசத்தை வந்தெய்துமாறு பதிவுத்தபாலில் அனுப்பப்படவேண்டும்.
பரீட்சை ஆணையாளர்,
பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி,
கொழும்பு 2.

13.5. வட மாகாணத்தைச் சேர்ந்த மாவட்டங்களில் வசிக்கும் வேட்பாளர்கள் தமது விண்ணப்பங்களை முறைப்படி பூர்த்திசெய்து தாம் வசிக்கும் பிரதேசத்தின் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்தகைய விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளருக்கு தாமதமின்றி அனுப்பி வைப்பதற்கு சம்பந்தப்பட்ட அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுப்பார்.

14.0. பரீட்சைக்குத் தோற்றல்
பரீட்சைக்கு ஒரு வாரம் முன்பாக வேட்பாளரை வந்தெய்துமாறு பிரவேச அட்டைகள் பரீட்சை ஆணையாளரினால் அனுப்பப்படும். அத்தகைய கால பகுதியினுள் தமது பிரவேச அட்டையைப் பெறாத வேட்பாளர்கள் பின்வரும் விவரங்களைக் கொடுத்து பரீட்சை ஆணையாளரிடம் விசாரணை செய்யவேண்டும்:-
(i) பரீட்சையின் பெயர்;
(ii) தெரிவு செய்த நகரம்;
(iii) விண்ணப்பித்த மாவட்டம்;
(iv) தபாற்கந்தோரின் பெயர், திகதி, விண்ணப்பம் அனுப்பப்பட்ட பதிவு தபால் இலக்கம்;
(v) காசுப் பற்றுச் சீட்டின் இலக்கமும் திகதியும் அதை வழங்கிய அஞ்சல் அலுவலகமும்.

15.0. வேட்பாளர் தமது அடையாளத்துக்கு ஆதாரவாக பின்வரும் பத்திரங்களுள் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய அடையாள அட்டை.
(ii) அஞ்சல் அதிபதியால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் அடையாள அட்டை.
(iii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

16.0. பரீட்சை 1994 ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறும்,

17.0. இத்தப் பரீட்சை நடத்தப்படுவதுடன் இதற்கு முன்னர் அரச சேவையில் அல்லது அரசகூட்டுத்தாபனங்களில் அல்லது மாகாண அரச சேவையில் எழுதுநர் இணைந்த சேவை ஆட்சேர்ப்புக்கென நடத்தப்பட்ட எல்லாப் பரீட்சைகளினதும் பெறுபேறுகள் காலங் கடந்ததாகக் கருதப்படும்.

18.0. இதனைத்தே குறிப்பிடப்படாத ஏதாவது விடயம் பொருத்தமான ஆட்சேர்ப்பு அதிகாரியால் தீர்மானிக்கப்படும்.
எல்லா வேட்பாளர்களும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பொதுப் பரீட்சை விதிகளுக்கமைந்து நடப்பதற்குக் கட்டுப்பாடுடையவராவர்.

19.0. இப்பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டபின் வேட்பாளர் தமது பெறுபேறு தொடர்பாக ஏதாவது விசாரணை மேற்கொள்ள விரும்பினால் அவர் தனது மேன்முறையீட்டை பெறுபேறுகள் வெளியான தினத்திலிருந்து ஒரு பஞ்சாங்க மாதத்திற்குள் பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதன் பின்னர் செய்யப்படும் மேல்முறையீடுகள் கவனிக்கப்படமாட்டாது.

வை. பி. புஸ்ஸதெனிய
பொது நிர்வாக அமைச்சின் செயலாளர்.
(நிர்வாகம்)

பொது நிர்வாக அமைச்சு
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 7,
1994 மே மாதம் 06.

## விண்ணப்பகாரரின் கையொப்பத்தினை சான்றுபடுத்தல்

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும்.................. என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவரெனவும் தனது கையொப்பத்தினை எனது முன்னிலையில் 1994ஆம் ஆண்டு...........தினத்தில் வைத்தாரெனவும் உறுதிப்படுத்துகிறேன்;

..........................................
கையொப்பத்தினை சான்றுபடுத்தும் உத்தியோகத்தரது கையொப்பம்

கையொப்பத்தினை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் முழுப்பெயர்:..............................
பதவிப் பெயர்: ..............................
முகவரி: ......................
திகதி: ......................

பகுதி - 2

..................பிரதேச செயலாளரின் சான்றிதழ்:

1. மேற்கூறப்பட்ட பகுதி 1இல் பந்தி1லிருந்து 14 வரை விண்ணப்பகாரரால் தரப்பட்ட விவரங்கள் சரியானவை/தவறானவை/திருத்தப்பட வேண்டியவை
[பொருத்தமற்ற சொற்களை நீக்கவும்]
(குறிப்புரை ஏதும் இருப்பின் கீழே தரப்பட வேண்டும்.)

2. 17/92 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் படி மேற்கூறிய பகுதி 1இல் பந்தி 8இலிருந்து 11 வரையின் கீழ் தரப்பட்ட உண்மைகளைப் பொறுத்தமட்டில் வேட்பாளருக்குச் சலுகைப் புள்ளி வழங்குவதற்குப் பின்வரும் விடயங்கள் பொருத்தமானவை.
[பொருத்தமற்றவற்றை நீக்கி விடுக]
(i) தந்தை அல்லது தாய் கொல்லப்பட்டமை.
(ii) கணவன் அல்லது மனைவி கொல்லப்பட்டமை.
(iii) குடும்பத்தை ஆதரித்து வந்த சகோதரர் அல்லது சகோதரி கொல்லப்பட்டமை.
(iv) ஆதனம் முற்றாக அழிக்கப்பட்டமை.
(v) மேற்கூறப்பட்ட (i), (ii), (iii) இல் குறிப்பிடப்பட்டவர் முழுமையான இயலாமைக்கு உட்படுத்தப்பட்டமை?
(vi) மேற்கூறப்பட்ட (i), (ii), (iii) இல் குறிப்பிடப்பட்டவர் பகுதியான இயலாமைக்கு உட்படுத்தப்பட்டமை:

3. 1992 - 03 - 24 ஆம் திகதிய 17/92 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையில் தேவைப்படுத்தப்பட்ட படி என்னால் மேலே தரப்பட்ட விவரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் சான்றுபடுத்துகிறேன். இவ்வலுவலகத்தில் பெறக்கூடிய தகவல்களைக் கொண்டு மேற் கூறப்பட்ட சுற்றறிக்கையின் படி வேட்பாளருக்கு உரித்துடைய நூற்றுவீத புள்ளி..........ஆகும். அத்துடன் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்ப அங்கத்தவர் கொல்லப்பட்டிருப்பதால் அவர் மேலதிகமாக பத்து (10) புள்ளிகளுக்கு உரித்துடையவராவர். குடும்ப அங்கத்தவர்கள் எவருக்கும் மேற் கூறிய சலுகைப் புள்ளிகளை வழங்குமாறு நான் இதற்கும் முன்னர் விதப்புரை செய்யவில்லை என சான்றுபடுத்துகிறேன்.
(பொருத்தமற்ற சொற்களை நீக்கி விடவும்)
மேற் கூறப்பட்ட சுற்றறிக்கையின் கீழ் அவருக்கு சலுகைப் புள்ளிகளை வழங்குமாறு நான் விதப்புரை செய்கிறேன் / விதப்புரை செய்யவில்லை.

..........................................
பிரதேச செயலாளரினது கையொப்பம்

பெயர்..............................
திகதி..........................

## படிவ இல. III
## குடும்ப அங்கத்தவர்களது சம்மதத்தை வெளிப்படுத்துதல்

17/92ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின்படி அரச சேவையில் எழுதுநர் இணைந்த சேவைகளுக்கும் அரச கூட்டுத்தாபனங்களில் எழுதுநர் சேவைகளும் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடத்தப்பட்ட பொதுப் போட்டிப் பரீட்சையில் தேசிய அடையாள அட்டை இல...........ஐக் கொண்ட (ஆட்பதிவு ஆணையாளரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை) திரு/திருமதி/செல்வி..................க்கு மட்டும் சலுகைப் புள்ளிகளை வழங்குவதற்கு கீழே கையொப்பமிட்டிருக்கும் (குடும்ப அங்கத்தவர்கள் ஆகிய) நாம் எமது சம்மதத்தை வெளியிடுகின்றோம்.

| பெயரும் முகவரியும் | தொழில் | உறவு | கையொப்பம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5 | | | |

எல்லா அங்கத்தவர்களும் எனது முன்னிலையில் கையொப்பமிட்டனர்.

..........................................
கிராம உத்தியோகத்தர்
கிராம உத்தியோகத்தர் பிரிவு
[உத்தியோக இலச்சனை]
சரியென சான்றுபடுத்தப்பட்டுள்ளது

..........................................
பிரதேச செயலாளர்
(உத்தியோக இலச்சனை)

## பரீட்சை நிலையம்

கீழே தரப்பட்டுள்ள பரீட்சை நிலையங்கள் அமைந்துள்ள நகரங்களும், மாவட்டங்களும் தொடர்புள்ள இலக்கங்களை இணைக்கப்பட்டிருக்கும் நிரலிலிருந்து தெரிந்தெடுத்து உரிய கூடுகளில் குறிப்பிடுக,
பரீட்சை நிலையங்கள் அமைந்திருக்கும் நகரங்கள்:

### கொழும்பு மாவட்டம் (1)

| நகரம் | நகர இல. |
|---|---|
| கொட்டாஞ்சேனை | 01 |
| மருதானை | 02 |
| பொரளை | 03 |
| கறுவாத்தோட்டம் | 04 |
| பம்பலப்பிட்டி | 05 |
| ஹவ்லொக் ரவுண் | 06 |
| நுகேகொடை | 07 |
| மொறட்டுவை | 08 |
| பிலியந்தலை | 09 |
| ஹோமாகமை | 10 |
| மஹரகம | 10 A |
| ஹன்வெல்ல | 11 |
| அவிஸ்ஸாவெல | 12 |

### கம்பஹா மாவட்டம் (2)

| | |
|---|---|
| நீர்கொழும்பு | 13 |
| மினுவாங்கொடை | 14 |
| திவுலப்பிட்டிய | 14 A |
| வெயாங்கொடை | 15 |
| கம்பஹா | 16 |
| [illegible] | 17 |
| வத்தளை | 17 A |
| க | |
| னவி | 18 |
| தொம்பே | 19 |

### களுத்துறை மாவட்டம் (3)

| | |
|---|---|
| பாணந்துறை | 21 |
| களுத்துறை | 22 |
| மத்துகமை | 23 |
| அளுத்கமை | 24 |

### மாத்தளை மாவட்டம் (4)

| | |
|---|---|
| மாத்தளை | 25 |
| கல்வெலை | 25 A |
| நாவுல | 25 B |
| லக்கல பல்லேகமை | 25 C |

### கண்டி மாவட்டம் (5)

| | |
|---|---|
| கண்டி | 26 |
| கட்டுகஸ்தோட்டை | 27 |
| தெல்தெனிய | 27 A |
| வத்தேகம | 27 B |
| நுகவெலை | 28 |
| கலகெதர | 28 A |
| கம்பளை | 29 |

### நுவரெலியா மாவட்டம் (6)

| | |
|---|---|
| ஹெதனுவெவ | 30 |
| நுவரெலியா | 31 |
| வட்டுமுல்ல | 31 A |
| ஹற்றன் | 31 B |
| கினிகத்தேனை | 31 C |

### காலி மாவட்டம் (7)

| | |
|---|---|
| அம்பலாங்கொடை | 32 |
| காலி | 33 |
| பத்தேகம | 34 |

### மாத்தறை மாவட்டம் (8)

| | |
|---|---|
| வெலிகம | 35 |
| மாத்தறை | 36 |
| கம்புருபிட்டி | 36 A |
| ஹக்மனை | 36 B |
| தெய்யாந்துறை | 36 C |
| கிக்கெவலை | 37 |
| அக்குரஸ்ஸ | 38 |
| கொட்டபொலை | 39 |

### அம்பாந்தோட்டை மாவட்டம் (9)

| | |
|---|---|
| பெலியத்தை | 40 |
| வலஸ்முல்லை | 41 |
| வீரகெட்டிய | 42 |
| தங்கல்லை | 43 |
| அம்பலாந்தோட்டை | 44 |
| அம்பாந்தோட்டை | 45 |
| திஸ்ஸமகராம | 46 |

### யாழ்ப்பாண மாவட்டம் (10)

| | |
|---|---|
| சாவகச்சேரி | 47 |
| யாழ்ப்பாணம் | 48 |
| தெல்லிப்பளை | 49 |
| பருத்தித்துறை | 50 |

### மன்னார் மாவட்டம் (11)

| | |
|---|---|
| மன்னார் | 51 |
| முருங்கன் | 51 A |

### முல்லைத்தீவு மாவட்டம் (12)

| | |
|---|---|
| முல்லைத்தீவு | 52 |

### வவுனியா மாவட்டம் (13)

| | |
|---|---|
| வவுனியா | 53 |

### திருகோணமலை மாவட்டம் (14)

| | |
|---|---|
| கந்தளாய் | 54 |
| திருகோணமலை | 55 |
| மூதூர் | 55 A |
| பதவி பராக்கிரமபுர | 55 B |
| கிண்ணியா | 55 C |

### மட்டக்களப்பு மாவட்டம் (15)

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 56 |
| ஏறாவூர் | 56 A |
| காத்தான்குடி | 56 B |

### அம்பாறை மாவட்டம் (16)

| | |
|---|---|
| அம்பாறை | 57 |
| சேரகலை | 57 A |
| கல்முனை | 58 |
| அக்கரைப்பற்று | 58 A |
| சம்மாந்துறை | 58 B |

### புத்தளம் மாவட்டம் (17)

| | |
|---|---|
| தென்னப்புவ | 59 |
| மாதம்பை | 60 |
| சிலாபம் | 61 |
| புத்தளம் | 62 |

### குருநாகல் மாவட்டம் (18)

| | |
|---|---|
| குளியாப்பிட்டிய | 63 |
| பிங்கிரிய | 63 A |
| நாரம்பல | 64 B |
| பொல்காவலை | 65 C |
| குருநாகல் | 66 |
| இப்பகமுவ | 66 A |
| தொடங்கஸ்லந்த | 66 B |
| மொறகிக | 66 C |
| நிக்கவெரட்டிய | 67 |
| மாகோ | 68 |

### அனுராதபுர மாவட்டம் (19)

| | |
|---|---|
| மதவாச்சி | 69 |
| கெக்கிராவை | 70 |
| அனுராதபுரம் | 71 |
| கலன்பிந்துனுவெவ | 71 A |
| கஹட்டகஸ்கிலிய | 71 B |

### பொலநறுவை மாவட்டம் (20)

| | |
|---|---|
| பொலநறுவை | 72 |
| ஹிங்குராகொட | 72 A |

### பதுளை மாவட்டம் (21)

| | |
|---|---|
| பண்டாரவளை | 73 |
| வெலிமடை | 74 |
| பதுளை | 75 |
| பசறை | 75 A |
| மகியங்கனை | 75 B |
| கிராந்துருக்கோட்டை | 75 C |
| ஹாலிஎல | 75 D |

### மொனராகலை மாவட்டம் (22)

| | |
|---|---|
| பிபிலை | 76 |
| மொனறாகலை | 77 |
| வெல்லவாய | 77 |

### கேகாலை மாவட்டம் (23)

| | |
|---|---|
| கேகாலை | 78 |
| ரம்புக்கனை | 79 |
| மாவனெல்லை | 80 |
| ருவான்வெல | 81 |

### இரத்தினபுரி மாவட்டம் (24)

| | |
|---|---|
| எஹலியகொடை | 82 |
| இரத்தினபுரி | 83 |
| பெல்மதுல்ல | 84 |
| பலாங்கொடை | 85 |
| கலாவனை | 86 |
| எம்பிலிப்பிட்டிய | 87 |

### கிளிநொச்சி மாவட்டம் (25)

| | |
|---|---|
| கிளிநொச்சி | 88 |
| பளை | 88 A |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
192/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## விவேகானந்தருக்கு ஒரு சவால்!

இந்து மதத்தின் வீரத் துறவி சுவாமி விவேகானந்தரின் உலகப் புகழ்பெற்ற சிக்காகோ சர்வமத மாநாட்டுப் பிரசங்கத்தின் நூற்றாண்டு நினைவு நிகழ்வுகள் இப்போது கிழக்கு நாடுகளில் மட்டுமன்றி மேற்கு நாடுகளிலும் நடைபெற்று வருகின்றன.

உலகின் பல பகுதிகளிலும் உள்ள இராமகிருஷ்ண நிலையங்கள் சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களையும், போதனைகளையும் இளம் சந்ததியினருக்கு அறிமுகம் செய்யும் வகையில் நூற்றாண்டு நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளன.

தமிழீழப் பிரதேசங்களிலும் அத்தகைய நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன: ஸ்ரீலங்காவில் தலைநகர் கொழும்பிலும் சுவாமி விவேகானந்தர் சிக்காகோ நூற்றாண்டுப் பெருவிழா இன்று இருபத்தொன்பதாம் திகதி பிரமாண்டமான முறையில் நடைபெறவிருக்கிறது. இப்பெருவிழாவில் இலங்கையில் உள்ள நான்கு பெருஞ் சமயங்களையும் சேர்ந்த பிரபல மதகுருமார்களும், அறிஞர்களும் கலந்து கொண்டு, விவேகானந்தரின் கருத்துக்களையும் போதனைகளையும் நினைவுபடுத்த உள்ளனர்.

சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ பிரசங்கம் சர்வமத சமரசத்தை வலியுறுத்தியதாலேயே— எல்லாச் சமயங்களும் ஒரே பரம்பொருளையே அடைய வழி காட்டுகின்றன; அதனால் மதங்களுக்கு இடையே போட்டி, பூசல் இருக்கக் கூடாது. எல்லா மதங்களும் சேர்ந்து மனித மேம்பாட்டுக்கு உழைக்க வேண்டும் என்று வலியுறுத்தியதாலேயே— சரித்திரம் பிரசித்தம் அடைந்தது.

ஆனால் சுவாமியினுடைய அந்தக் கருத்து மீண்டும் நினைவுபடுத்தப்படுகின்ற சூழலிலேயே, ஸ்ரீலங்கா பௌத்தமத குருமார் தங்கள் மதத்தை மேலும் முதன்மைப் படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி மகஜர் ஒன்றைத் தயாரித்துள்ளனர். அந்த மகஜரில் பத்து லட்சம் பௌத்தர்களின் கையொப்பங்களை பெற்று அரசுக்குச் சமர்ப்பிப்பது அவர்களின் திட்டம்.

இலங்கை அரசமைப்புச் சட்டத்தில், "பௌத்த மதத்துக்கு முதன்மைத் தானம் வழங்கப்படுதல் வேண்டும்..." என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த முதன்மைத் தன்மை மட்டுமல்ல, விசேடத் தன்மையும் வழங்கப்பட வேண்டும் என்று கோரும் வகையில் குறிப்பிட்ட மகஜர் அமைந்துள்ளது. "இந்த நாட்டில் உள்ள பௌத்த சாசனத்தை ஏனைய மதங்களுடன் ஒப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்"— என்ற கோரிக்கையின் அர்த்தம் அதுவே.

விவேகானந்தர் வலியுறுத்திய சர்வமத சமரசக் கோட்பாட்டுக்கும், சமயங்கள் சமமானவை என்ற கருத்துக்கும் முற்றிலும் மாறான — நூற்றுக்கு நூறு எதிரான — தன்மையை தோற்றுவிக்க பௌத்த மத குருமாரும், தலைவர்களும் முயல்கின்றனர்!

'சர்வமதக் கோட்பாடு என்ற ஏமாற்று வேலை உடன் தடை செய்யப்பட வேண்டும்' — என்று விவேகானந்தரின் கருத்துக்கு மாசு கற்பிக்க முயல்கிறார்கள்.

மகஜரில் உள்ள ஏனைய அம்சங்கள் பௌத்த மதத்தவர் அல்லாதவரின் அடிப்படை மத உரிமைகளைப் பறிப்பனவாக அமைகின்றன.

மொத்தத்தில் தீவிர பௌத்த வாதத்தை நடைமுறைக் கோட்பாடாக்குவதற்கான முயற்சி இது. ஸ்ரீலங்காவின் அரசியல் வாதிகள் இதற்கு ஆதரவளிக்கும் பட்சத்தில் இங்கே இப்போது நடக்கும் இனச் சண்டை மதச் சண்டையாகவும் மாறும்!

பௌத்த மதத்தை மேலோங்க விட்டு, அடுத்த சமயத்தினர் சமய சமரசம் பேசித் தம்மை அடிமைப் படுத்திக் கொள்ளச் சம்மதிப்பரா? இலங்கை விவேகானந்தருக்குச் சவால் விடும் நாடாகவே மாறப் போகிறது!

## ஆலயங்களில்

சாவகச்சேரி புராதன தான்தோன்றி வாரிவனேஸ்வர சிவன் ஆலயத்தின் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் இன்று காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை சிவன் அம்பாளுக்கு சங்காபிஷேகம் நடைபெறுவதுடன் திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும். (க-31)

★ ★ ★

வடமராட்சி கிழக்கு குடாரப்பு தாளில் கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் நாளை திங்கள் இரவு நடைபெறும். (கு-117)

★ ★ ★

மட்டுவில் வடக்கு சந்திரபுரம் ஸ்ரீமகா முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி முதல் நடைபெறும். (ஒ-117-30)

★ ★ ★

மீசாலை தெற்கு ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமியின் அலங்காரத் திருவிழாவின் பத்தாம் நாளாகிய நாளை திங்கட்கிழமை மணவாளக் கோல தினத்தை முன்னிட்டு பகல் ஸஹஸ்ர சங்காபிஷேகமும் அன்னதானமும் நடைபெறும்.

மாலை 6மணிக்கு விசேட ஷண்முகார்ச்சனை நடைபெற்று ஆறுமுகப் பெருமான் முத்துச் சப்பறத்தில் வீதியுலா வருவார்.

★ ★ ★

துன்னாலை கோவிற்கடவை காட்டுப் புலம் சித்தி விநாயகர் கோயில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும். (ஒ-173)

## நாளை

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலைகளின் தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகள் நாளை திங்கட்கிழமை பி.ப. 1 மணிக்கு மகாஜனாக் கல்லூரியிலும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யூனியன் கல்லூரியிலும் கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும். (ஒ)

★ ★ ★

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பேக்கரி, தேநீர்சாலை, உணவுச்சாலை ஆகியவற்றை நடத்துபவர்களுக்கான - சுகாதாரம் பேணுதல் பற்றிய — கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை பி.ப. 3மணிக்கு நகரசபை சபாமண்டபத்தில் நடைபெறுமென நகரசபை செயலாளர் திரு. சி.நடராசா அறிவித்துள்ளார். (ஒ-117)

## உதைபந்தாட்ட விதிகள் பற்றிய மீட்டல் விரிவுரை

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான — உதைபந்தாட்ட விதிகள் பற்றிய — மீட்டல் விரிவுரைகள் இன்று முதல் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை 61, ஈச்சமோட்டையில் உள்ள சங்கப் பணிமனையில் நடைபெறும். முதலுதவி வகுப்புகளும் விரிவுரைகளின் போது இடம்பெறும். (உ)

## யாழ். இந்துவும் இருநேரமாக இயங்கும்

நாளை முதல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் இருநேரப் பாடசாலையாக இயங்கும் என கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## பாடசாலைகளில்

மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்க பாலர் பாடசாலை விளையாட்டுப்போட்டியும் பெற்றோர் தினவிழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சங்கத் தலைவர் திரு.சி.இராமநிதி தலைமையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## துப்பாக்கி காட்டி மிரட்டிய அரசியல்வாதி

துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்தினார் என்ற முறைப்பாட்டின் மீது மத்திய மாகாணசபையின் எதிரணி உறுப்பினர் விக்சன் குறுப்பு ஆராச்சி கண்டிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கண்டி நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்ட அவரை அவரது சொந்தப் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார். (உ-எ)

# கடதாசியில் எழுதிய உரிமைகள் வேண்டாம் என்கிறார் தொண்டா!

கொழும்பு, மே 28

கடதாசியில் எழுதப்பட்ட உரிமைகளால் எமக்குப் பிரயோசனமில்லை. கிடைக்கும் உரிமைகள் நாம் அனுபவிக்க கூடியதாகவேண்டும்.

அமைச்சர் தொண்டமான் எட்டியாந்தோட்டையில் நடைபெற்ற இ.தொ.கா கூட்டம் ஒன்றில் பேசியபோது முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

"அரசாங்கங்கள் அமைக்கப்படுவதற்கு எமது உதவி தேவைப்படுகிறது. அதனால் அரசு எம் உதவியை நாடுகிறது.

"ஜனாதிபதி கேட்டதைத் தொடர்ந்து ஐ.தே.க. பொதுச் செயலாளர் பதவியை சிறிசேன கூரே ராஜினாமாச் செய்துவிட்டார்.

ஆனால் இ.தொ.கா.வில் அதன் தலைவர் மட்டுமல்ல பொதுச் சபையே கேட்டும் கூட செல்லச்சாமி பொதுச் செயலாளர் பதவியை ராஜினாமாச் செய்யாமல் இருக்கிறார்"— என்றும் தொண்டமான் கூறினார். (ஒ-எ)

## சுற்றிவளைப்பு மோதலில் 3 போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், மே 29

கடந்த 22 ஆம் திகதி காலை மட்டக்களப்பு தேற்றாத்தீவு கிராமத்தை சுற்றிவளைத்த ஸ்ரீலங்கா பொலிஸ் அதிரடிப்படையினருடன் விடுதலைப் புலிகள் மோதலில் ஈடுபட்டனர்.

இதில் போராளிகளான லெப்டினன்ட் யுதன் (கணபதிப்பிள்ளை மனோகரன் — மட்டக்களப்பு), 2 ஆம் லெப்டினன்ட் குருதேவன் அல்லது தவராஜ் (வேல்நாயகம் மனோரஞ்சிதன் - அம்பாறை), வீரவேங்கை சேதீஸ் அல்லது பொட்டு (செல்லத்துரை புனிதராஜ் - மட்டக்களப்பு) ஆகியோர் வீரமரணமடைந்தனர். (இ-3)

## யாழ். மருந்தகங்களில் தடை செய்யப்பட்ட கருத்தடை மருந்து விற்பனை

யாழ்ப்பாணம், மே 29

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள மருந்தகங்கள் சிலவற்றில், வெளியே விற்பதற்குத் தடை விதிக்கப்பட்ட ஒரு வகைக் கருத்தடை மருந்து விற்பனையானது கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

வடபிராந்திய உணவு — மருந்து பரிசோதகர் திரு. சி. மகாதேவன் மருந்தகங்களில் நடத்திய திடீர் பரிசோதனைகளின் போது —

"டிப்போ புறவீரா" என்ற கருத்தடை ஊசி மருந்து இங்கு விற்கப்படுவது கண்டு பிடிக்கப்பட்டது.

மொத்தம் பதினான்கு மருந்தகங்களில் இருந்து குறிப்பிட்ட வகை கருத்தடை மருந்து கைப்பற்றப்பட்டது.

அரச மருத்துவ மனைகள், சுகாதார வைத்திய அதிகாரிகளின் சிகிச்சை நிலையங்கள் குடும்பத்திட்ட சங்க நிலையங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் பயன்படுத்துவதற்கோ விற்பதற்கோ தடை விதிக்கப்பட்ட "டிப்போ புறவீரா" ஊசி மருந்து —

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டிருப்பதாக, மருந்து விநியோக தொழில் நுட்பப் பணிப்பாளர் வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்குக் கொடுத்த தகவலைத் தொடர்ந்தே —

இங்குள்ள மருந்தகங்களில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. (அ-ஒ-162)

## மலத்தியோன் தெளித்ததால் மலேரியாவின் தாக்கம் நகரப் பகுதியில் குறைவு

யாழ்ப்பாணம், மே 29

யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பகுதியில் உள்ள வீடுகளுக்கு மலத்தியோன் மருந்து தெளிக்கப்பட்டு வருவதையடுத்து மலேரியா நோயின் தாக்கம் குறைந்து வருகிறது.

மேலும் மலேரியா நோயை பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு மக்களின் ஒத்துழைப்பை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரன் கோருகின்றார்.

★ வீட்டுக்கு அயலில் நீர் தேங்கி நுளம்பு பெருகுவதைத் தவிர்த்தல்.

★ வீட்டுக்கு மலத்தியோன் மருந்து தெளிக்க ஊழியர் வரும்போது பூரண ஒத்துழைப்பு வழங்குதல்.

★ காய்ச்சல் அல்லது மலேரியா குணம் குறிகள் கண்டவுடன் குருநகர், நல்லூர், யாழ் வைத்தியசாலை மத்திய மருந்தகம் சென்று இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளுதல்.

★ மலேரியாவுக்குத் தரும் மருந்துகளைப் பூரணமாக உட்கொள்ளல்— போன்ற நடைமுறைகளை கையாளுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஒ-162)

## தேர்தல் உத்தியை தயாரிக்க சு.க. மத்திய குழு கூடுகிறது

கொழும்பு, மே 29

எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை எதிர் கொள்வதற்கான தேர்தல் உத்தியைத் தயாரிப்பதற்காக சுதந்திரக்கட்சியின் புதிய மத்திய குழு எதிர்வரும் முதலாம் திகதி மாலை கூட்டப்படுகிறது.

கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் அவரது ரோஸ்மீட் பிளேஸ் வாசஸ்தலத்தில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம். ஜயரத்னாவுக்கு அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## ஏப்ரல் ஒளிவீச்சு வெளியானது

யாழ்ப்பாணம், மே 29

விடுதலைப் புலிகளின் நிதர்சனம் நிறுவனத்தின் மாதாந்த வெளியீடான ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகையின் ஏப்ரல் மாத ஒளிவீச்சு வெளிவந்து விட்டது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்பேராசிரியர் அ.துரைராஜாவை தமிழ்த் தேசியத் தலைவர் விருது வழங்கிக் கௌரவித்தமை

தமிழக எழுத்தாளரும், கப்பமங்கள ஆசிரியருமான மோகன் சுவாமிநாதனின் யாழ் விஜயம்.

கொழும்பு நகரை அதிரவைத்த குண்டு வெடிப்புச் சம்பவங்கள் மற்றும் பல கலையம்சங்களையும் தாங்கி ஏப்ரல் மாத ஒளிவீச்சு வெளியாகியுள்ளது. (ஒ)

# யாழ் மாவட்டத்தில் சூழல் வாரம் ஒரு மாதம் அனுஷ்டிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 29

உலக சூழல் வாரத்தை எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதியிலிருந்து ஒருமாத காலத்துக்கு யாழ். மாவட்டத்தில் அனுஷ்டிப்பது என மாவட்ட சூழல் பாதுகாப்புக் குழு தீர்மானித்துள்ளது.

இக் குழுவின் தலைவரான யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு க. மாணிக்கவாசகரின் தலைமையில் அண்மையில் யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்ற மேற்படி குழுவின் கூட்டத்தில் இது பற்றித் தீர்மானிக்கப்பட்டது.

குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மற்றும் [illegible] தீர்மானங்கள் வருமாறு:

★ ஜூன் மாதம் 6ஆம் திகதியிலிருந்து இக் காலப்பகுதியில் காலை 1 மணி நேரம் சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பேச்சுக்களை பாடசாலைகளில் அதிபர்கள் ஒழுங்கு செய்து நடத்துதல்.

★ ஜீ.சீ.ஈ. சாதாரண தரத்துக்கு மேல் கற்கின்ற மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியையும், அனைத்து மாணவர்களும் பங்கேற்கும் ஓவியப் போட்டியையும் பாடசாலை மட்டத்தில் 18-06-1994 அன்று காலையும் மாலையும் நடத்துதல்.

★ பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் 19-06-1994 [illegible] போட்டியையும் மாலையில் [illegible] போட்டியையும் நடத்துதல்.

★ ஒவ்வொரு பிரதேசசெயலர் பிரிவிலும் தெரிவு செய்யப்படும் ஐந்து பேருக்கும் ஜூன் மாதம் 26 ஆம் திகதி மாவட்ட மட்ட இறுதிப் போட்டியை நடத்துதல்.

★ ஜூலை மூன்றாம் திகதி நடைபெறும் பரிசளிப்பு விழாவில் சூழல் பாதுகாப்பு தொடர்பான விசேட மலர் ஒன்றை வெளியிடுதல் வெற்றியீட்டியோருக்கு பரிசில் வழங்குதல். (க-162)

## கண் சத்திரசிகிச்சை

யாழ்ப்பாணம், மே 29

யாழ். றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் கண் சத்திரசிகிச்சை முகாமின் இரண்டாம் கட்ட சிகிச்சைக்கான தெரிவுப் பரிசோதனை கடந்த 22 ஆம் திகதி கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்றது. அன்று 100க்கு மேற்பட்டோர் பார்வையிடப்பட்டனர்.

இவர்களில் சிகிச்சைக்கெனத் தெரிவு செய்யப்பட்ட 'கற்றக்ட்' நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் வைத்தியசாலையில் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது. (க)

## மேல்மாகாண பிரதம அமைச்சர் காமினி

கொழும்பு, மே 29

ஐ.தே.கட்சியின் மேல் மாகாண பிரதம அமைச்சராக காமினி திஸநாயக்காவை நியமிக்க கட்சி முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய மாகாண பிரதம அமைச்சராக சரத் அமுனுகமவை நியமிக்கவும் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

அமைச்சர்களை மாற்றியமைக்கும் விடயத்தில் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் முதலிடம் வழங்குவதென ஐ.தே.க. தலைமையகம் முடிவு செய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## சங்கீத, நடன செயல்முறை பரீட்சைகள்

யாழ்ப்பாணம், மே 29

கடந்த ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சையில் சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான செயல்முறைப் பரீட்சைகள் யாழ் கல்வி வலயம் இரண்டில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

மேற்படி செயல்முறைப் பரீட்சையில் தோற்றவுள்ள பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் கோட்டக் கல்வி அலுவலகங்கள் ஊடாகவும்—

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபால் மூலமும் அனுப்பப்பட்டிருப்பதாக பிரதி கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் அறிவித்துள்ளார். [உ-5]

## விளையாட்டு நிகழ்வுகள்

"உதயன்" வெற்றிக் கிண்ணத்துக்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம், ஏ கழக மைதானத்தில் நடத்தும் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

ஏழுபேர் கொண்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்படும் இச்சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4.00 மணி முதல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 4.00 மணி:- வல்வை வி.க. "ஏ" எதிர் மாதகல் சென். தோமஸ் வி.க.

★ 4.45 மணி:- உரும்பராய் திருக்குமரன் வி.க எதிர் பொலிகை விநாயகர். (உ)

★ ★ ★

அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் இணுவிலில் உள்ள மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வந்த உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 3.00 மணி முதல் நடைபெறும்:

மாலை 4.00 மணிக்கு நடைபெறும் இறுதியாட்டத்தில் காங்கேசன்துறை யங்றோயல் அணியை எதிர்த்து இளவாலை ஹென்றிஸியன் அணி மோதும்.

முன்னதாக — மூன்றாவது இடத்தைப்பெறும் அணியைத் தெரிவு செய்வதற்காக நடைபெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் வி.க. அணியை எதிர்த்து பாஷையூர் சென் அன்ரனீஸ் அணி விளையாடும்.

இந்த ஆட்டங்களுக்கு பிரதம விருந்தினராக வலி வடக்கு பிரதேச செயலர் திரு. நா. வேதநாயகன் கலந்து கொள்வார். (உ-20)

★ ★ ★

வார்காவற்றுறை — வேலணை பிரதேச செயலர் பிரிவில் உள்ள கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.00 மணி:- பாரதி வி.க. எதிர் சோலையான் வி.க.

★ 4.00 மணி:- திருவள்ளுவர் வி.க. எதிர் கோவளம் வி.க. (உ-20)

★ ★ ★

ஈ. எஸ். பேரம்பலம் சகநிறுவனத்தின் ஆதரவுடன் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றன. பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ காலை 8.30 மணி:- சென்றலைட்ஸ் வி.க. சொக்ஸ் அணி எதிர் யாழ். பல்கலைக்கழக அணி.

★ பிற்பகல் 1.00 மணி:- ஜொனியன்ஸ் வி.க. அணி எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் வி.க. அணி.

## விடுதலைப் புலிகள் தாக்கும் போது தப்பி ஓடுவதற்கு பாலம் அமைத்துத் தாருங்கள்!

### சிங்கள குடியேற்ற வாசிகள் கோரிக்கை

கொழும்பு, மே 29

"விடுதலைப் புலிகள் தாக்கும் போது, தப்பி ஓடுவதற்கு உதவியாக ஆற்றின் மீது தற்காலிக பாலம் ஒன்றை அமைத்துத் தாருங்கள்" —

இவ்வாறு பொலன்னறுவ மாவட்டத்தில் உள்ள மதுறு ஓயா பகுதி சிங்கள குடியேற்ற வாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனராம்.

இக்கோரிக்கையை உரிய அதிகாரிகளிடம் பல தடவைகள் தெரிவித்து விட்டோம். ஆனால் அது செவிடன் காதில் ஊதிய சங்காக போய்விட்டது என்றும் அவர்கள் கூறினர். (ஒ-எ)

## ஜூன் முதல் வாரத்தில் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பிக்க எதிரணி முடிவு

கொழும்பு, மே 29

சுதந்திரக் கட்சியின் தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அடுத்த மாதம் முதல் வாரத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிக்கஇருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

இதனிடையில்—

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரம் பற்றி மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்காக நாடு முழுவதும் கருத்தரங்குகளையும் சிறிய கூட்டங்களையும் நடத்த முன்னணி திட்டமிட்டிருப்பதாக சு.க. பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

"எமது ஏழாண்டு கால ஆட்சியை ஏழாண்டு சாபம் என்று ஐக்கிய தேசியக் கட்சி அன்று கிண்டல் பண்ணியது. ஆனால் இன்று மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை "பதினேழு ஆண்டு கால சாபம்" என்று கூறி கிண்டல் செய்கின்றனர்" என்றும் அவர் கூறினார். (ஒ-எ)

## வாரிவளவு நல்லியக்க சபை விழா

யாழ்ப்பாணம் மே 29

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபையின் வைகாசி மாத கல்வி ஊக்குவிப்பு நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டையில் இயங்கும் யாழ்ற்ரன் கல்லூரியில் அதிபர் திரு. ந. பரமசிவம் தலைமையில் நடைபெறும்.

இன்றைய நிகழ்வில் இலவச சிறுவர் பாடசாலை வாசிகசாலை திறப்பு விழா, முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் பரிசளிப்பும் இடம்பெறும்.

## நுவரெலியாவில் செயலகம் எரிந்த சம்பவம்: அரசியல்வாதிகள் பின்னணி!

### காமினியின் சகா குற்றச்சாட்டு

கொழும்பு, மே 29

நுவரெலியா கச்சேரி முற்றாகத் தீக்கிரையான சம்பவத்தின் பின்னணியில் செல்வாக்கு மிக்க அரசியல் வாதிகள் சிலர் இருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கெட்ட நோக்கத்துடன் அவர்கள் செயல்பட்டதாக முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்காவுக்கு நெருங்கிய சகாவான மாகாண சபை உறுப்பினர் ஒருவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

நுவரெலியா கச்சேரி தீப்பிடித்ததற்குக் காரணம் மின் ஒழுக்காக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்திருக்கின்றனர்.

இதற்கிடையில் —

நுவரெலியா கச்சேரி தீவிபத்தில் எரிந்த சம்பவம் குறித்து பூரண விசாரணை நடத்தும்படி நுவரெலியா மாவட்ட எம்.பியும் அமைச்சருமான ரேணுகா ஹேரத் உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சர்கள் தொண்டமான், ரேணுகா ஹேரத் மற்றும் முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா ஆகியோர் விபத்து நடந்த இடத்தைச் சென்று பார்வையிட்டனர். (ஒ-எ)

**பெண்ணே! உனக்குப் பொன்வேலி**
**கண்ணே! அது உன் உயிர் கொல்லி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் விருப்பத்துக்கு மாறாக என்னை பதவியிலிருந்து நீக்கினால் ஐ. தே. க. மீது வழக்கு

## அக்கட்சியின் எம். பி. கூறுகிறார்

எம். பி. பதவியில் இருந்து தன்னை தனது விருப்பத்துக்கு மாறாக நீக்கினால், கட்சித் தலைமைப்பீடத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்லப் போவதாக ஐ. தே. க தேசிய பட்டியல் எம். பி யாவ காமினி ஒபயவன்ச தெரிவித்துள்ளார்.

தேசியபட்டியல் எம். பிக்களை கட்சித் தலைவர் விலக்குவதற்கு சட்டத்தில் இடமில்லை என்றும் —

அவ்வாறு விலக்கினாலும் தேர்தல் ஆணையாளர் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார் என்றும்— அவர் தெரிவித்துள்ளார்.

''நான் பதவியைத்துறந்தால், அந்த இடத்துக்கு மறைந்த ஜனாதிபதியின் பாரியாரை நியமிக்கவேண்டும் என்று நான் விதித்த நிபந்தனைக்கு கட்சி எதுவித பதிலும் இதுவரை தெரிவிக்கவில்லை'' — என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-3)

## தென்கொரியாவில் வேலை வாய்ப்பு

கொழும்பு, மே 29

அடுத்த மாத இறுதியில் ஆயிரம் இலங்கையருக்கு தென்கொரியாவில் தொழில் வாய்ப்புக் கிடைக்கவிருப்பதாக தொழில்துறை அமைச்சர் எம். எஸ். எம். அபுசாலி தெரிவித்தார். (ஒ-எ-6)

## வள ஆலோசகர் நியமிக்கப்படுவா

யாழ்ப்பாணம், மே 29

யாழ்ப்பாணம் . கல்விவலயம் ஒன்றுக்கு வள ஆலோசகர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

மகரகம தேசிய கல்வி நிறுவனத்தில் பயிற்சி பெற்று மீண்டு வந்து பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு இந்த வள ஆலோசகர்கள் ஈடுபடுத்தப்படுவர்.

பட்டதாரிகளாகவும், பட்டப்பின் டிப்ளோமா பெற்றவர்களாகவும் உயர்வகுப்பில் மூன்று வருடத்துக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம் உடையவர்களாகவும் உள்ள ஆசிரியர்கள் இப்பதவிகளுக்குத்தெரிவு செய்யப்படுவர். (அ)

## மேல்மாகாண...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியையே ஆதரிக்குமாறு இப்போதே ஆதரவு திரட்டப்பட்டு வருகிறதாம்.

அவர்களுக்குப் பணத்தைக் கொடுத்தேனும் தமது பக்கம் இழுப்பதற்கான முயற்சிகள் தீவிரமாக நடந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேல் மாகாண சபை நிர்வாகத்தை சந்திரிகா குமாரணதுங்காவிடம் இருந்து பறித்து விடுவதால் —

அவரது அரசியல் செல்வாக்கைக் குறைத்து அவரை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடச் செய்யாமல் தடுத்து விடலாம் அல்லது பொ.ம.ஐ. முன்னணிக்கு அவர் ஆதரவு தேடுவதைத் தடுத்து விடலாம் — என்ற நோக்கத்துடனும் இந்த அரசியல் தில்லுமுல்லுக்கு ஆயத்தங்கள் நடப்பதாகவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பெரும் சவாலாக உருவெடுத்துள்ள சந்திரிகாவின் செல்வாக்கைக் குறைப்பதற்கு, ஐ தே, கட்சியும், அதில் மீண்டும் சேர்ந்துள்ள காமினி திஸநாயக்காவும் சேர்ந்து நடத்தும் அரசியல் அடாவடித்தனம் இது என்றும் அவர்கள் வர்ணித்தனர்.

கனவான் அரசியல் நடத்தப்போவதாகக் கூறிக்கொண்டு, ஐக்கிய தேசியக் கட்சி மேலிடம் இவ்வாறு சட்டத்தைப் பயன்படுத்தி ஜனநாயக விரோதமாக நடந்து கொள்வதை மக்கள் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டு இருக்கிறார்கள் — எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ-6)

# புகைபொருள் மறுப்பு தினம் மே 31 இல்

யாழ்ப்பாணம், மே 29

மே 31 சர்வதேச புகைப் பொருள் மறுப்புத் தினத்தை ஒட்டி தொல்புரம் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் புகைத்தல் பழக்கத்தின் தீமைகளை விளக்கிக் கூறும் துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அத்துடன் 31 ஆம் திகதி சைக்கிள் ஊர்வலம் ஒன்றையும் ஒழுங்குபடுத்தியுள்ளது.

# சுத்திகரிப்பு தொழிலாளர்: நேர்முகப் பரீட்சை ஜூன் 6

வட பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழுள்ள வைத்தியசாலைகளில் அமைய சுத்திகரிப்பு தொழிலாளர்களை நியமிப்பதற்கான முதல் கட்ட நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் காலை 8.30 மணி முதல் யாழ். விக்ரோறியா வீதியிலுள்ள வட பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இப்பரீட்சை நடைபெறும்.

இதற்கான செயல் முறைப் பரீட்சை எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் நடைபெறும்.

முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட உள்ள 20 பேருக்கு ஆயிரத்து 400 விண்ணப்பங்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும்—

இதில் 150 பேருடைய விண்ணப்பங்களே நேர்முகப் பரீட்சைக்கென தெரிவு செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

முதல் கட்டமாக நியமிக்கப்படும் 20 பேரைத் தொடர்ந்து அடுத்த கட்டமாக சுமார் 50 பேருக்கு நியமனம் வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-162]

## மாணவருக்கு பயிற்சி வகுப்புகள்

1994 ஆம் ஆண்டு க. பொ. த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள சண்டிலிப்பாய் சங்கானைக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் மாக வித்தியாலயம் ஆகியவற்றில் நடைபெற்று வருகின்றன. (க-152)

## தெற்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூழ்கியுள்ளன. அங்கு பல இடங்களில் வாகனப் போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது.

நில்வளகங்கையின் நீர்மட்டம் நான்கு அடிகளால் அதிகரித்ததை அடுத்து அருகில் உள்ள குடியிருப்புகள் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டுள்ளன.

சப்பிரகமுவா மாகாணத்தில் ஓரிடத்தில் ஏற்பட்ட மண்சரிவில் பலர் புதையுண்டுள்ளனர் என்றும்—

அவர்களின் சடலங்கள் மீட்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அப் பகுதிகளில் மேலும் மண்சரிவுகள் ஏற்படக் கூடிய ஆபத்து இருப்பதால் பொது மக்கள் அங்கிருந்து பாதுகாப்பான பகுதிகளுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

- நாட்டின் பெரும் பாலான பகுதிகள் இன்றும் மப்பும் மந்தாரமுமாக இருக்கும் என வானிலை அவதான நிலையம் அறிவித்தது. (இ-5)

## மருந்து தட்டுப்பாடு

தென்மராட்சிப் பகுதி ஆஸ்பத்திரிகளில் நோயாளர்களுக்கான மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

## கடனுதவி

சுயதொழில் முயற்சிக்கென குறைந்த வட்டியில் அங்கத்தவர்களுக்கு கடனுதவி வழங்க யாழ்ப்பாண மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அங்கத்தவர்களில் சுமார் நூறு பேருக்கு தலா ஐயாயிரம் ரூபா வீதம் கடனுதவி வழங்கவும்—

இக்கடனை பெற விரும்பும் அங்கத்தவர்கள் தத்தம் சங்கங்களின் தலைவர் செயலாளர்களின் அனுமதியைப் பெற்று விண்ணப்பங்களை சமாசத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும்— சமாசம் அறிவித்துள்ளது. (க-152)

# மீனவர்கள் நலம் பேண கூட்டுறவுச் சங்கங்கள்

## வலி மேற்கில் அமைப்பு

அராலி, மே 29

வலி மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஆயிரத்து 24 மீனவ குடும்பங்களின் நன்மை கருதி 11 மீன்பிடி தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட உள்ளன.

முதலாவது கூட்டுறவுச் சங்கம் அண்மையில் அராலி கிழக்கில் அமைக்கப்பட்டது. அராலி மத்தி, அராலி மேற்கு, வட்டுக்கோட்டை, பொன்னாலை, மூளாய், தொல்புரம், சுழிபுரம், பனிப்புலம், பண்ணாகம் ஆகிய பகுதிகளில் ஏனைய சங்கங்கள் அமைக்கப்பட உள்ளன.

எதிர்காலத்தில் மீன்பிடி தொழிலாளர்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகள் யாவும் இச் சங்கங்கள் ஊடாகவே மேற்கொள்ளப்படும். (எ-த-12)


# மரண அறிவித்தல்கள்

## நடராசா கனகேஸ்வரன்

(இளைப்பாறிய அதிபர் ஆசிரியர் கலாசாலை பலாலி)

கொக்குவில் கலட்டியைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான நடராசா கனகேஸ்வரன் 28-05-1994 அன்று சிவபதமடைந்தார்.

இவர் நடராசா தெய்வநாயகி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், சரஸ்வதி (ஆசிரியை-மகாஜனாக் கல்லூரி) அன்புக் கணவரும், கனகேஸ்வரி - சின்னத்தம்பி, காலஞ்சென்றவர்களான கனகச்சந்திரன், கனகராணி ஜெயவர்த்தனா, கனகபவன் மற்றும் கனகசேகரம் (த பினான்ஸ் கொம்பனி யாழ்ப்பாணம்), கனகரஞ்சிதம், கனகசாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ச. கார்த்திகேசுவின் மைத்துனரும், காலம்சென்ற த. சங்கரப்பிள்ளை சிவரத்தினம் தம்பதிகளின் மருமகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (29-5-94) 10 மணிக்கு 7 ஆம் கட்டை, மல்லாகத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக மல்லாகம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. கனகசேகரம்
(சகோதரன்)

7 ஆம் கட்டை,
மல்லாகம். (31157)

## திருமதி சரஸ்வதி பொன்னையா

திருமதி சரஸ்வதி பொன்னையா 20-05-94 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

இவர் கலட்டி வண்ணார்பண்ணையைச் சேர்ந்த காலஞ்சென்ற துரையப்பா மங்களத்தின் மகளும், காலம் சென்ற பொன்னையாவின் மனைவியும், இந்திராதேவி, ரதிதேவி, காலஞ்சென்ற ரவீந்திரன் ஆகியோரின் அருமைத் தாயாரும், அருளானந்தத்தின் சகோதரியும், சந்திரா, மகேந்திரலிங்கம் ஆகியோரின் மாமியாரும், ருஷி, மஞ்சி, திவாகரி, பிரியதர்ஷினி, கயன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 21-05-94 இல் கனடாவில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
திருமதி. த அருளானந்தம்
(மைத்துனி)

10/3, கன்கோயில் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (31155)

## திரு. வல்லிபுரம் இராஜதுரை

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட, கிளிநொச்சி நீதிமன்றத்தில் முதலியாராக கடமையாற்றிய திரு. வல்லிபுரம் இராஜதுரை அவர்கள் 28-05-94 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம், செல்லாச்சி அவர்களின் அன்பு மகனும், திருமதி. கனகாம்பிகையின் அன்புக் கணவரும், ரமேஸ், ரவிக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சிவசேதுபுரம், கொட்டடி இல்லத்தில் இருந்து 29-05-94 அன்று காலை 10 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:-
மகன் ரமேஸ்
மருமகள் விஜி

சிவசேதுபுரம்,
கொட்டடி. (31161)

## மயில்வாகனம் கெங்காதரம்

(பிரபல ஓவியர்)

பிரபல ஓவியர் மயில்வாகனம் கெங்காதரம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மயில்வாகனம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், இரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், அருளம்மா, காலஞ்சென்ற மகேஸ்வரி அவர்களின் சகோதரரும், காங்கேசன் (ஓவியர்), கமலாசினி (பருத்தித்துறை), ஈஸ்வரி, லோகேஸ்வரி, பூங்கோதை (பிரான்ஸ்), கலாவதி, றஞ்சினி, சிவகுமார் (கனடா), தயாளன் (பாரிஸ்), கண்ணன் (கொழும்பு) அம்பிகை, அம்பிகைபாலன் [பிரான்ஸ்], மங்களம் [கொழும்பு] ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாம்பிகை, காலஞ்சென்ற பரஞ்சோதி [பருத்தித்துறை], நடராசா [மண்டைதீவு], ஜெகநாதன் [கொழும்பு], ஸ்ரீதரன் [பிரான்ஸ்], விக்னேஸ்வரன் [யாழ்/மாநகர சபை], தியாகராசா, அசோக்குமார் [கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 29-05-94 பி. ப. 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்:-
மனைவி, மக்கள், மருமக்கள்

14, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். [31162]



# ரவி ஒளி கானம்

*மங்களகரமான திறப்புவிழா*



இன்று காலை 7 மணி முதல் 9 மணி வரையுள்ள
சுபவேளையில்
100 ஏ, அருச்சுனாசாலை (ஸ்ரான்லி வீதி)
யாழ்ப்பாணம் கட்டடத்தில்
ரவி ஒளி கானம்
(வீடியோ, ஓடியோ சென்ரர்)
திறந்து வைக்கப்படும்
நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் இந்த சுப நிகழ்வில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



(சி-8354)



# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L DAY CLASSES (8 30 – 2.00)
EVENING CLASSES (4.15 - 6.15)
SAT. SUN. CLASSES (8.00 – 2.00)

- மொத்தம் 9 பிரிவுகளில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
- வாராவாரம் Paper Class இலவசமாக நடைபெறுகின்றது.
- திறமையால் பிரபல்யமான திறமைமிக்க யாழ். முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவை.

(சி/8241)



# இளங் கலைஞர் மன்ற மாதாந்த இசை நிகழ்ச்சி

ஆதரவு
யாழ். பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

இடம்: மன்றக் கலாமண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்
காலம்: 29 5 94 ஞாயிறு மாலை 5 மணி

நிகழ்ச்சி நிரல்

மாலை 5.00 — 5-25 பாட்டு:
செல்விகள் இ. நயோமி, எஸ். மாலினி, எஸ். குகாநந்தி, ப. சியாமளா, ஜெ. வித்தியாயினி, செ. கரோலின், தி. தாரணி, சி. சிவரம்யா, ம. நிவேதிகா, பா. நிரஞ்சனா,
செல்வி கே. சுகிர்தா — வயலின்
திரு. ப. ரதிரூபன் — மிருதங்கம்

5-25 — 5 50 வீணை இசை:
செல்விகள் சிவலிங்கம் கலைமதி, நடராஜா அமுதா, ஸ்ரீகாந்தன் ஸ்ரீரஞ்சனி, குகதாசன் சயந்தி, ஸ்ரீஸ்கந்தராஜா - பிரியதர்சினி, தெய்வேந்திரன் ரேணுகா, ராஜேந்திரா கிருசாந்தி,
செல்வன் ஸ்ரீவத்சாங்கன் — மிருதங்கம்

5-50 — 6-35 பாட்டு:
திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம் — பாட்டு
செல்வி பாக்யலக்ஷ்மி நடராஜா — வயலின்
திரு. எஸ். துரைராசா — மிருதங்கம்
எம். சஜன் — கடம்

6-35 — 7-45 இசைக் கச்சேரி:
திரு எஸ். குமாரசாமி — பாட்டு
திரு. ஆர். எஸ். தேசவமூர்த்தி — வயலின்
திரு. எஸ். கண்ணதாசன் — மிருதங்கம்
திரு. ப. ரதிரூபன் — கடம்

7-45 — 8-15 மங்கள விளக்கேற்றல்:
திரு. ஆ. ச. தியாகராஜா அவர்கள் [பணிப்பாளர், யாழ். ப. நோ. கூ. சங்கம்]
செல்வி ஆ. மகாதேவி பி. ஏ. [பணிப்பாளர், யாழ். ப. நோ. கூ. சங்கம்]

தலைமையுரை:
திரு. சொலமன், சூ. சிறில் அவர்கள் [தலைவர், யாழ். ப. நோ. கூ. சங்கம்]

பிரதம விருந்தினர் உரை:
கலாநிதி கந்தையா குணராசா அவர்கள் [செங்கை ஆழியான்] பிரதேச செயலர், யாழ்ப்பாணம்.

8-15 — 9-30 இசை நாடகம்:
''களத்தில் காத்தான்'' புகழ் புத்தூர், புதுவை அன்பனின்
''சதியை வென்ற சாவுகள்''
இசைநாடகம்

கலா ரஸிகர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேற்படி மன்றத்தினர்

[சி-8350]



யாழ் மிட்ரவுண்
# றோட்டறக்ட் கழகம்
யாழ். றோட்டறி கழக ஆதரவில்
தமிழ் பாரம்பரிய விளையாட்டை ஊக்குவிக்கும் முகமாக யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும்

## தாச்சிச் சுற்றுப் போட்டி

★ விண்ணப்பம் பெறும் இடம்:- பூபாலசிங்கம் பொத்தக நிலையம்
★ விண்ணப்பக் கட்டணம்:- ரூபா 50
★ விண்ணப்ப முடிவு திகதி:- 10 - 06 - 1994

— செயற்றிட்ட இயக்குநர்

(சி-8353)



# ஆசிரியர்கள் தேவை

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கான, விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், சங்கீதம், நடனம் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை. பட்டதாரிகள், க. பொ. த. உயர்தர வகுப்பில் சித்தியடைந்தோர், 6-6-94 திங்கட்கிழமைக்கு முன்னதாக இல. 680 தமிழீழக் கல்விக்கழகம், பருத்தித்துறை வீதி, நல்லூர் என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும். பட்டதாரி ஆசிரியர்களுக்கு 2500/-. க. பொ. த. (உயர்தர) வகுப்பில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கு 2000/- வும் வேதனம் வழங்கப்படும். ஆனால் மிகவும் கஸ்டப்பிரதேசங்களுக்கு நியமிக்கப்படும், பட்டதாரி ஆசிரியர்களுக்கு 4000/- வேதனமும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(சி-8349)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 29-05-1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது